REGISTERED AT THE G.P.O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி ஐப்பசி கரு (காந்தி ஆண்டு 80) 31-10-'48, ஞாயிறு | இதழ் 16

கணக்குப் பதிவு நூல்

BOOKKEEPING in Tamil

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்
க. நவரத்தினம் F.C.I. (Eng.)
அவர்களால்

மாணவர்கட்கும்
வியாபார ஸ்தாபனங்கட்கும்
உபயோகப்படக்கூடிய முறையில்
விரிவாக எழுதப்பட்டுளது

விலை ரூபா 3.50..... தபாற் செலவு சதம் 50.

தனலக்ஷ்மி புத்தகசாலை
சுன்னுகம்

# மற்றோர் யுத்தம் நிகழுமா?

## அமெரிக்கப் பத்திரிகை ஆராய்ச்சி

**யுத்தம்** எவ்வளவுக்கு நெருங்கி வருகின்றதென்பது இன்று மக்களின் உள்ளங்களில் நன்கு படிந்திருக்கின்றது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இதே கதையாகவே இருக்கின்றதென அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'டைம்' பத்திரிகை தெரிவிக்கின்றது,

**இப்பத்திரிகை இதுவிஷயமாக வெளியிட்டுள்ள விசேஷ கட்டுரையில் எப்போது யுத்தம் ஆரம்பமாகுமென உறுதியிட்டுக் கூற முடியாதெனத் தெரிவிக்கின்றது,**

ஸ்டாலினுக்குக்கூட எப்போது யுத்தம் மூளுமெனத் தெரியாதாம். ஒருவரேனும் இதுபற்றிப் போதிய விபரங்களை அறிந்ததில்லை. ஒரு சிலர் வேறு சிலரிலும் பார்க்க ஏதோ அறிந்திருக்கின்றனர்.

ருஷியா, இராணுவப் பலத்துடன் யுத்த முஸ்தீப்பில் உடனே ஈடுபடுமென அமெரிக்காவுக்குத் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. கிழக்கு ஜேர்மனியில் ருஷியாவுக்குப் போதிய படைப்பலமிருக்கின்றதென அறியக்கிடக்கின்றது. ருஷியாவுக்குப் போதியளவு தரைப்படைகள் இருந்தபோதிலும், அமெரிக்காவுடன் சமாளிக்கும் சக்தியற்றதெனத் தெரிகின்றது. ருஷியாவிடம் அணுக்குண்டு இல்லை என்பதே குறித்த அமெரிக்கப் பத்திரிகையின் திடமான நம்பிக்கையாகும். செல்வ நிலையிலும் அமெரிக்கா மிகுந்த சக்திபடைத்துளது. அப்படியிருந்தும் ருஷியாவை எதிர்த்தால் அது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுமாம்.

அமெரிக்காவில் ஆதிக்கம் வகிப்பவர்கள் யுத்தத்தை விரும்புகின்றனர் என்பது கொம்யூனிஸ்டுகளின் சுலோகமாகவிருக்கின்றது. ஹென்றி உவாலஸ் என்பவரும் இதை ஆதரித்து நிற்கின்றார். பிரிட்டனில் உள்ள சில அதிகாரிகளும் அமெரிக்கா, யுத்தத்தை விரும்புகின்றதென அபிப்பிராயப்படுகின்றனர். ருஷியா போதிய பலம்பெற முன்னர் அதை அடக்கிவிட வேண்டுமென்ற எண்ணமே அமெரிக்காவை யுத்தத்தில் விருப்பமுறச் செய்திருக்கின்றதென்பது அவர்களின் கட்சியாகும்.

யுத்தத்தை விரும்பாதவர்களும் அமெரிக்காவில் உளர். இவர்கள் கற்பனை உலகிற் சஞ்சரிப்பவர்கள். ருஷியாவையும், ஐக்கியநாடுகள் சங்கத்தையும் நம்பி மோசம்போனவர்கள். இந்த ஏமாற்றத்துக்குப் பரிகாரம் செய்வதற்காக இவர்கள் ருஷியாவை ஒரு கை பார்த்துவிட்டால் யுத்த பீதி அற்றுப்போமென எண்ணுகின்றனர்.

சுருங்கக் கூறுமிடத்து (1) மேற்றிசைநாடுகள் யுத்த முஸ்தீப்பில் ஈடுபடுவதை விரும்புவதாயில்லை. யுத்தத்தைத் தடை செய்வதற்காயினும் யுத்தம் செய்வதை இவர்கள் ஆதரிப்பதாயில்லை. (2) ருஷியா தங்களை எதிர்க்குமென்பதற்கும் நேர்முகமான ஆதாரங்களில்லையென இந்நாடுகள் கருதுகின்றன. (3) யார்தான் சண்டையை ஆரம்பித்தாலும் அவர்களுக்கு எதிர்த் தாக்குதல்களுமுண்டு.

இவை யாவும் குறித்த பெரிய விஷயம்பற்றி ஆராயும்போது கண்ட ஒரு சிறு முடிபாகும். யுத்தம் சம்பவிக்கக் கூடும்; ஒருவேளை சம்பவிக்கலாம்; யுத்தம் நிகழுமென எண்ணுவது வீண்; என்ற இம்மூன்று முடிபுகளை வைத்துக்கொண்டே யுத்தம்பற்றிப் பேசவேண்டியிருக்கின்றது.

முக்கியமான காரியங்களில் இரு நாடுகள் ஒன்றுக்கொன்று விசேஷமான அபிப்பிராயங்கள் கொள்ளும் போதே யுத்தம் உண்டாகின்றது.

அமெரிக்காவும், ருஷியாவும் தமக்கிடையே வேறுபாடுகள் உளவென்பதை நன்கு உணர்ந்துள்ளன.

இனி, இவர்களின் பலம் எப்படியிருக்கின்றதென்ற

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

## தீபாவளி

★

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்கள்

ஏதுதீ பாவளி யுரைத்திடுமி னென்றென்னை
யினிதுவின விடுமன்பரே
இவ்வுலகில் நிகழ்கின்ற பண்டிகைகள் யாவுக்கும்
இயைபுநனி கூறுமுறையே
ஈதுக்கு மொருசெய்தி கூறிடுவ ரதுதன்னை
இன்பொடு குறிப்பனறிவீர்
நீதிசெய் யாதுலகு துன்பமெனு மிருளூடு
நின்றயரு மாறுகொடிதே
நிறைவென்று கறைவாழ்வு தலைநின்று மடமொன்ற
நெடிதுவளர் நாகாசுரன்
நெறியற்ற செயல்கண்டும் அதிதியணி காதணியு
நீரினிறை யரியகுடையும்
சீதமே யெள்ளளவு மில்லாது பறிசெய்த
தீதுகண் டுங்கண்ணனுர்
செப்புமுய ரைப்பசித் தேய்பிறை பதின்மூன்று
சேர்கங்குல் வந்தணைவுறுஞ்
சீருறு சதுர்த்தசியி னவனுடல் துமித்ததே
தீபா வளிக்கேதுவாம்
ஓதுபா தகனவன் மாண்டவுட னெல்லோரும்
உவகையெனு மாழிமூழ்கி
உதயத்து நீராடி யொப்பரிய கோடிக
ளுடுத்தியொளிர் தீபவரிசை
உறுமிரவி னுறையுள்தளி யோங்கவைத் தனரின்றும்
உலகுகொண் டாடுமிதுவே.

# சுதந்திரத்தின்விலை!

## மந்திரிமாருக்கு மங்கள யோகம்

28-10-48

**இலங்கை** சுதந்திரம் பெற்ற நாள் முதலாக மந்திரிமாரும் அவர்தம் கோஷ்டியினரும் பிறநாடுகளுக்குப் போய் வருவது சர்வ சாதாரணமாகி விட்டது.

பிரதி மாதமும் ஒரு மந்திரியோ, அன்றேல் அவருடைய சகாக்களோ கடல் கடந்த வண்ணமாகவே யிருக்கின்றனர். அடுத்த மாத முற்பகுதியிற் போக்குவரத்து மந்திரி சேர் கொததலாவல அவுஸ்திரேலியாவுக்குப் பறக்கப் போகின்றார். அங்கு இரு நாடுகளுக்குமிடையே விமானப் போக்குவரத்தை ஒழுங்கு செய்வாரென அறியக்கிடக்கின்றது.

### செலவு அதிகரித்தல்

இதில் மிக முக்கியமான விஷயம் யாதெனில், இப்படிப் பிறநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு அரசாங்கம் செலவுக்கென உதவும் பணம் போதாதாம். ஆகவே அவர்களின் செலவை இருமடங்காக உயர்த்தியிருக்கின்றது. இது சுதந்திர தினமாகிய பெப்பிரவரி 4-ந் திகதியிலிருந்து கணிக்கப்படுகின்றது. நாளொன்றுக்குச் செலவுக்காக ஐந்துபவுண் பெற்ற மந்திரிமார் இனிப் பத்துப் பவுண் பெறுவார்கள். சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஏழு பவுணும், கனிஷ்ட அதிகாரிகளுக்கு ஐந்து பவுணுங் கொடுக்கப்படும். ஒருசமயம் ஆறு மந்திரிமாரும், [illegible] தலைவரும் மேள[illegible]டன் பிற நாடுகளுக்குப் புறப்பட்டனர். இவர்கள் சென்னைக்குச் சென்றாலும் பத்துப் பவுணில் ஒரு தம்பிடியுங் குறையமாட்டாது.

சேர் ஒலிவர் சமீபத்தில் இலங்கை பெற்ற சுதந்திரத்தைப்பற்றிப் பேசும்போது அது அதிக செலவிற் கிடைத்ததெனக் குறிப்பிட்டிருந்தார். இதில் எவ்வளவோ உண்மையிருக்கின்றது. சுதந்திரம் பெரிய செலவுத்தானைகளையே உண்டாக்கி யிருக்கின்றது. நாட்டு மக்களின் வரிப் பணத்தை வாரி இறைக்க வேண்டியதுதான்.

### லண்டன் திருவிழா

லண்டனில் அலங்காரமாக நடைபெற்ற சாம்ராச்சிய மந்திரிகள் மகாநாட்டைப்பற்றி இங்குள்ள அரசியல் வாதிகள் பல்வேறு அபிப்பிராயமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். தொழில் மந்திரி ஜனுப் ஜயா அவர்களின் கருத்தின்படி, குறித்த மகாநாடானது சாம்ராச்சிய மந்திரிமார்களை இணைத்துவைக்கும் சாதனமாக அமைகின்றது.

ஜனநாயக இயக்கத்தை மக்களிடையே பரவச்செய்யாமல் அதை நசிப்பதற்காக நடைபெறும் சதியாலோசனைக் கூட்டமெனக் குறித்த மகாநாட்டைப்பற்றித் 'தோழர்' கெனமன் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார். சோவியத்துக்கு எதிராக நடத்த [illegible] ஆசிய நாடு[illegible]



## கொழும்பு — நிருபர் கடிதம் ~

கள் சேர்ப்பதற்காகவே, அமெரிக்காவும் பிரிட்டனும் இம் மகாநாட்டை ஒழுங்கு செய்துள்ளன எனவும் தோழர் கெனமன் கருதுகின்றார்.

டொக்டர் என். எம். பெரோரா கூறியதாவது: "எனது அரசியற்கட்சி பலம் பெற்றுத் தலையெடுக்குமாயின் இலங்கையைச் சாம்ராச்சியச் சங்கிலித் தொடர்பிலிருந்து நீக்கிவிடுவேன். அப்புறம் இலங்கையைச் சுதந்திரமுள்ள குடியரசாகத் திகழச்செய்வேன்."

### சுதந்திர விழா

பெப்பிரவரி 4-ந் திகதி இனி இலங்கையின் சுதந்திர தினமாக அனுஷ்டிக்கப்படும். அன்று இலங்கை சுதந்திரம் பெற்றதென்பதை இதற்கிடையில் ஒருவரும் மறந்திருக்க மாட்டார்கள். ஓராண்டுப் பூர்த்தி விழாவை ஏக தடபுடலாகக் கொண்டாடுவதற்குத் திட்டங்கள் போடப்படுகின்றன. பொதுக் கட்டிடங்களிலே தேசியக் கொடிகள் விண் கூவிப் பறக்க வேண்டுமென்பதில் அரசாங்கம் இம் முறை மிகுந்த சிரத்தை கொண்டுள்ளது. சுதந்திர தினத்தை முன்னிட்டு; பிரத்தியேக முத்திரைகளும் அச்சிட்டு விற்பனை செய்யப்படும். டொமினியன் மண்டபத்தைக் குளாஸ்டர் கோமகன் றொறிங்டன் சதுக்கத்திலே திறந்து வைத்தபோது, அவ்விடத்திற் பிரதமர் சேனநாயகா சிங்கக் கொடியையும் ஏற்றிவைத்தார் அல்லவா? அதே இடத்திற் சுதந்திர ஸ்தம்பம் ஒன்றை நிறுவுவதற்கு அஸ்திவாரக் கல்லும் நாட்டப்படுமெனத் தெரிகின்றது. இதற்காக 350 யார் நீளமும் 250 யார் அகலமுங் கொண்ட ஒரு வெளி நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. சுதந்திர விழாவை முன்னிட்டுக் கலை விழாவும் நடைபெறும். தீபாலங்காரங்களைப் பற்றியும் வாணவேடிக்கைகளைப் பற்றியும் பேசவேண்டியதில்லை. ஒரே வர்ணஜாலமாக விருக்குமென இப்போதே எழுதிவிடலாம்.

### வேலை நிறுத்தம்

கேகாலையைச் சேர்ந்த கஸ்நாவைத் தோட்டத்திற் கடந்த 45 தினங்களாக வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ் வேலை நிறுத்தத்தின்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கண்ணீர்ப்புகையுடன் ஒரு பொலிஸ் படையும் அனுப்பப்பட்டது. இவற்றையெல்லாங் கண்டிப்பதற்காகக் கேகாலையில் மாபெருங் கூட்டமொன்று நடைபெற்றது. இடதுசாரிகளின் தலைவர்கள் இதிற் பங்குபற்றி அரசாங்கத்தின் வெட்கக்கேடான செயல்களைப்பற்றித் தும்புபறக்கப் பேசினர்.

### அண்ணாமலை அரசர்

இராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் சில மாதங்களுக்கு

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்

## பெற்ருர்தின விழா

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்துப் பெற்ருர்தின விழா சென்ற வியாழனன்று (28-10-48) வித்தியாலய மண்டபத்திற் சிறப்பாக நடைபெற்றது. கல்வி மந்திரி ஸ்ரீ. ஈ. ஏ. நுகவெல அவர்கள் சமுகங் கொடுத்து நன்மொழி கூறி விழாவைச் சிறப்பித்தார். சபைத் தலைவர் ஸ்ரீ. க. கனகரத்தினம் (உதவி மந்திரி) தலைமை வகித்தார்.

தலைமை ஆசிரியர் ஸ்ரீ. க. ஆறுமுகம் அவர்கள் தமது அறிக்கையில் வித்தியாலயத்து வளர்ச்சியைப்பற்றியும் அதன் அவசர தேவைகளைப் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டிருந்தார். வித்தியாலயத்து வளர்ச்சிநிதிக்காக அனைவரையும் தாராளமாகப் பொருள் உதவி செய்யுமாறும் அவர் வேண்டிக்கொண்டார்.

அவர் மேலும் தமது அறிக்கையிற் குறிப்பிட்டதாவது:

"பொருள் உடைமை வாதம் மலிந்து சமய உணர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடும் இக் காலத்தில் இவ்வித்தியாலயம் சமய வளர்ச்சியையும் சமயப் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வித்தியாலத்தைச் சிறப்புற நடாத்துவதற்குச் சபை நிருவாகிகள் எங்களுக்குப் பெரிதும் உதவி செய்துவருகிறார்கள். இவ் வித்தியாலயத்தை ஒரு கனிஷ்ட பாடசாலை ஆக்கவேண்டும் என்பதே ஆசிரியர்களதும் விவேகானந்தசபையாரினதும் விருப்பமாகும். அவ் விருப்பம் கைகூடினுல் சைவ மாணவர்கள் இளம்பராயத்தில் வேறு மத பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. ஆனுல் கட்டிடம் முதலான வசதிகளைச் செய்வதற்குப் பெருந் தொகையான பொருள் தேவை. அதைச் சேகரிப்பதற்காகச் சபை நிர்வாகிகள் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

"இறுதியாக இப்பொழுதிருக்கும் நிலையில் ஒரு மாணவனையாவது புதிதாகச் சேர்க்க முடியாது என்பதைக் கூறவிரும்புகிரேம். இங்குள்ள சைவ மக்கள் எல்லாரும் நினைத்தால் அந்த நிலையை மாற்றி அமைக்கலாம் என்பது எங்கள் கருத்து."

வித்தியாலச் சிறுவர்களின் ஆடல் பாடல்கள் நன்ருகவிருந்தன. நன்றியுரையுடன் விழா நிறைவேறியது.

## மாதகல் ஹரிசன சேவாசங்கம்

இம் மாதம் 23ந் திகதி சனிக்கிழமை மாலை மாதகல் ஹரிசன சேவா சங்கத்தின் ஆதரவில் ஓர் வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டது. சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்து வரும் சகல இளைஞர்களும், ஏராளமான ஹரிசனர்களும் கூடியிருந்தனர்.

அத்தருணம் ஸ்ரீ. எஸ். ஏச். பேரின்பநாயகம் தமது தலைமையுரையின் பின்னர் வாசிகசாலையைத் திறந்து வைத்தார். அவர் பேசுகையிற் குறிப்பிட்டதாவது: ஹரிசன சேவையில் ஈடுபட்டிருக்கும் எவரும் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற குறிக்கோளின் இலக்கியமாகத் தொண்டாற்ற வேண்டியதேயன்றி பிரதிபலனையே, பேர் புகழையோ விரும்பக் கூடாது. இப்போது நாம் இவ்விடயத்தை அதியற்புத முன்னேற்றத்தைத் தரும் எங்கள் எண்ணத்தைச் செயலில காட்டுகிறேம். 15 வருடங்களுக்கு முன்னே இவ்வித செயல் நடக்குமாயிருந்தால் இவ் வாசிகசாலையே தீப்பற்றியிருக்கும். எங்கள்மீது கல்மாரி பொழிந்திருக்கும். அத்துடன் அவர் ஹரிசனங்களின் கல்வியை உயர்த்த அனைவரும் உழைக்க வேண்டுமெனவும் கூறினர். ஸ்ரீ. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் ஹரிசனங்களும் வாசிகசாலைகளும் என்ற விடயத்தைப் பல ஆதாரங்களுடன் நன்கு விளக்கினர். ஹரிஜன சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் பெண்மணிகளதும், ஆண்களதும் ஒத்துழைப்புவேண்டுமென்றும், அவர்கள் சுயநலமற்ற பொதுச் சேவைகளிலே ஈடுபட வேண்டுமென்றும், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பது அவர்களது கடமையென்றும் அவர் தெரிவித்தார். ஸ்ரீ. வி. சுப்பரமணியம், (ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர்) மாதகலிளைஞர் சங்கத்தின் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டினர்.

ஸ்ரீ. வி. கந்தசாமி அவர்கள் சாதிகளில்லை யென்றும், ஹரிசன இளைஞர்கள் பலர் கலைஞர்களாகக் காட்சியளிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார். —கடிதம்

## சுயபாஷா மாணவர்

அகில இலங்கைச் சுயபாஷா மாணவர் இயக்கத்தின் நிர்வாக சபைக் கூட்டமொன்று இம் மாதம் 17-ந் திகதி சன்மார்க்க போதனு தவிபாஷா பாடசாலை மண்டபத்தில் திரு. க. முருகேசு அவர்கள் தலைமையில் கூடப்பெற்றது.

அத்தருணம் பின்வரும் தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. சமீபத்தில் வித்தியாபகுதியால் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தின்படி "சுய பாஷையில் ஆசிரிய தராதரப்பத்திரமுடைய ஒருவரின் இடத்திற்குப் பயிற்றப்பட்ட ஒரு ஆசிரியரை நியமிக்கலாம்."

எனவே தராதரப்பத்திரமுடையவர்கள் உத்தியோக மெடுக்க முடியாமல் இருக்கின்றனர். ஆகையால் சுய பாஷையில் ஆசிரிய தராதரப்பத்திரத்துடன் இவ்வாண்டு ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பவர்களை உடனே பயிற்றுவித்தல் வேண்டும். அத்துடன் சிரேஷ்ட தராதரமுடையவர்களெல்லோரும் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சை யெடுக்க அனுமதியளிக்கப்படல் வேண்டும்.

—கடிதம்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


## தமிழன்பர் கவனிக்கவும்!

அறிஞர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் :

| | | |
|---|---|---|
| 1. | தியானமும் வாழ்க்கை உயர்வும் | 0-8-0 |
| 2. | கடவுளும் வாழ்க்கை நலமும் | 1-0-0 |
| 3. | உலக நன்மையே ஒருவன் வாழ்வு | 0-8-0 |
| 4. | வாழ்க்கை இன்பம் | 1-0-0 |
| 5 | நமது உயிர் நிலை | 1-0-0 |

வித்துவான் முத்துக்கிருஷ்ண ரெட்டியாரவர்கள் இயற்றிய கந்தபுராணம் – வசனம் 5-0-0

விரிவான புத்தகப் பட்டியலுக்கு எழுதுங்கள் :

உமாதேவன் கம்பெனி
பதிப்பாளர்
தபால் பெட்டி 1584, சென்னை.

இலங்கை முழுவதும் எங்கள் பிரசுரங்களை விற்பனை செய்ய ஒரு ஏஜெண்டு தேவை. [3541]



சிறந்தபலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது]

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த சிந்தையாளன்

## வ. ரா. பற்றி 'ஸாகா' மதிப்பு

ஸ்ரீ வ. ரா. அவர்களை மெச்சுபவர்கள் இவ்வாரம் அவருடைய 60-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர். வ. ரா. அவர்களுக்கு இவ்வளவு வயதாகிவிட்டதென்பதை நம்புவது கஷ்டமாகவிருக்கின்றது. சுகவீனமும் பஞ்சுபோன்ற வெண்ணிறத் தலையுமே அவருக்கு வயதேறிவிட்டதென்பதற்கு அறிகுறிகளாகும். மற்றும்படி அவர் இளமையுடன் பொலிவுற்று விளங்குகின்றார். சமூகத்தில் உருவாகும் கருத்துக்களைக் காலம், மக்கள்மீது திணித்துவிடுவது இயல்பு. உணர்ச்சியான விஷயங்களில் ஏற்படும் இணைப்பிலிருந்தே வயதின் மேம்பாட்டையும் ஞானத்தையும் அறிய முடிகின்றது. விலங்கங்களிலிருந்தும் விலகிக்கொள்ளும் தந்திரத்தைச் சிறுவர்கள் மற்றவர்களைப் பார்த்துப் பழகிக்கொள்ள முன்னர், அவர்களுக்குப் புத்தியில்லையென நினைக்கின்றோம். ஆனால் அச்சிறுவர்கள் சுயமாக எண்ணும் சக்தி படைத்தவர்கள். ஒரு குழந்தையைப் போல வேறோர் குழந்தை யிருப்பது அபூர்வம். ஒவ்வோர் குழந்தைக்கும் அதற்கு உரித்தான ஒரு தனித்தன்மை உண்டு. அது தனது சொந்த உலகத்திலேயே வாழ்ந்து வருகின்றது. பின்னர் பிறர் செய்வதைப் பார்த்து, தான் பின்பற்றிவந்த வழியை விட்டு, ஏனைய கும்பலுடன் சேர்ந்து கொள்ளுகின்றது. இளம் உள்ளமானது சுகதுக்கத்துக்காக வசதியான வழியையே பின்பற்றிவிடுகின்றது. ஆனால், வ. ரா. அவர்களோ இதை முற்றாக எதிர்த்துநின்றார்.

* * *

வ. ரா. தனது தலைமுறையில் ஏனையோருடன் இணைந்தோடவில்லை. இன்னும் விளக்கமாகக் கூறினால் ஆற்றுடன் சேர்ந்து அள்ளுப்படவில்லை. அதாவது அவர்கள் ஏதோ செய்துவிட வேண்டுமென்பதற்காக ஒன்றிலும் ஈடுபடவில்லை. பகவத்கீதை கூடக் கடமையை செய்யும்படியும், பலனை எதிர்பார்க்க வேண்டாமெனவும் போதிக்கின்றது. எத்தனையோ பேர்

**இத்தினத்திலே சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்திற் பேரறிஞர் வ. ரா. அவர்களின் மணிவிழா கொண்டாடப்படுகின்றது. ஸ்ரீ. கே. காமராஜ் தலைமை தாங்குகின்றார். அச்சமயம் வ. ரா. அவர்களுக்குத் தமிழன்பர்களின் சார்பாகப் பொற்கிழியும் வழங்கப்படும்.**

**வ. ரா. அவர்களின் மேதையை மதிப்பிட்டுப் பத்திரிகாசிரியர் காஸா சுப்பராவ் அவர்கள் ஸ்வதந்திரா என்ற தமது உயர்தர ஆங்கில வாரப் பத்திரிகையில் எழுதிய கட்டுரை இங்கு வெளியாகியுள்ளது. 'ஸாகா' என்பது அவரது புனை பெயராகும். இந்தியாவிலுள்ள ஆங்கில எழுத்தாளர்களில் 'ஸாகா' முக்கிய ஸ்தானம் பெற்று விளங்குகின்றார்.**

பகவத்கீதையைப் பாராயணஞ் செய்கின்றனர். ஆனால் இவர்களில் வெகு சிலரே அதன் உள்வீட்டை அறிந்திருக்கின்றனர். எதிலும் பற்றுவைக்க வேண்டாமெனப் பகவத் கீதை கூறுகின்றது. ஆனால் ஆசாரம் பேசித் திரியும் எத்தனையோ போலிகள் பகவத்கீதை யென்ற போர்வைக்குள்ளே மறைந்துகொண்டு, தங்கள் வியாபாரத்தைத் திறம்பட நடாத்தி வருகின்றனர். சமயத்தின் பேரால் கள்ளச்சந்தையில் வியாபாரஞ்செய்து கொள்ளை இலாபம் அடித்து வருபவர்களைக்கண்டு வ. ரா. திகில் அடைந்தார். கடவுளிலே பாரத்தைப்போட்டுவிடும் உலகத்தைக்கண்டு அவர் எதிர்த்தார்.

* * *

வ. ரா. அவர்களின் எழுத்துக்கள் அவருக்குரித்தான தனித்தன்மை வாய்ந்தன. நுதலிப்புகுதல், ஒத்து முறை வைப்பு என்ற உத்திகளை அவர் கையாளுவதில்லை. பல்வர்ண மணிகளால் இழைக்கப்பெற்ற மாலை போன்றதே அவருடைய நடை. இதனை அவர் வெகு திறமையுடன் கையாண்டு வெற்றி கண்டார். அவருடைய எழுத்துக்கள் பட்டந் தீர்ந்தவை. உள்ளத்தை அள்ளுஞ் சக்தி வாய்ந்தவை. ஆனால் மக்களை இயக்கிச்செல்லும சக்தி அந்தளவுக்கில்லை. தெளிந்த நீரோட்டம் போலத் தங்கு தடையின்றி எழும் கருத்துக்களே மக்களின் உள்ளங்களிற் பதிந்து அவர்களை வசப்படுத்தும் சக்தி வாய்ந்தன. மக்களைக் குதூகலிக்கச் செய்வதுடன் அக் கருத்துக்கள் அவர்களை எழுச்சி பெறவும் செய்ய வேண்டும். இத்தனைக்கும் உள்ளம் நிறைவாக விருக்கவேண்டும். பிறநாட்டினர் படித்தாலும் சலிப்படையாத முறையில் எழுத்துக்கள் அமைய வேண்டும். வ. ரா. தனது உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளும் விஷயங்களிலேயே சதா ஊறியிருக்கிறார். இங்கிலையில் ஒருவர் எழுதும்போது அவர் சுயமாகப் பேசுவது போலவே எழுதுகின்றார். அத்துடன் அவ்வெழுத்துக்கள் விவாதத்துக் குரித்தான வகையில் அமைந்தும் விடுகின்றன. காந்திஜியின் எழுத்துக்கள் இந்த வகையைச் சேர்ந்தன. மகாத்மா காந்தியின் சக்தி மிகுந்த எழுதுகோல் அரசியற்றுறையில் அதிர்ச்சியை உண்டாக்க முன்னர், வ. ரா. தனக்குக் கிடைத்த எல்லைக்குள் நின்றுகொண்டு கடதாசி பேனா மூலம் மூட பக்தியில் மூழ்கியிருந்த பட்டிக்காட்டு மக்களை எதிர்த்து அவர்களிடையே மிகுந்த அதிர்ச்சியை உண்டாக்கினார். அவர்களின் எதிர்ப்புக்களைப் பிரதிகூலங்களுக் கிடையிலும் சமாளித்தார்.

* *

பேசுவது போலவே எழுதவும் வேண்டுமென்ற முறையைத் தமிழிற் புகுத்தியவர் வ. ரா. அவர்களே யாவார். சாதாரண மனிதனும் படித்து விளங்கிக் கொள்ளுமாறு அவர் எழுதலானார். இதுவே என்று பலரும் விரும்பிக் கைக்கொள்ளும் நடையாகிவிட்டது. அநேகர் எண்ணுவது போல, இலகுவாக எழுதுவது இலேசான காரியமல்ல. அலங்காரமாகச் சுற்றிவளைத்து எழுதுபவர் தனது வெள்ளை உள்ள[illegible] [illegible]சாத்தியமான தொன்று. எளிய நடையைக்கையாளுவதற்குஉறுதியானஉள்ளம்வேண்டும். அது நிறைவு பெற்றிருக்கவும் வேண்டும். ஆழ்ந்த உள்ளத்தினின்றும் பிறக்கும் கருத்துக்களே சமூகத்தைத் தட்டியெழுப்பும் சக்தி வாய்ந்தன. உறக்கமற்ற ஒரு உள்ளத்தின் ஒளிப்பிழம்புகளாகவே வ. ரா. வின் எழுத்துக்கள் விளங்குகின்றன. ஆண்மை மிகுந்தவர்கள்கூட அவரை அசைக்க முடியாது. எவ்வளவு குமுறல்களுக்கு மத்தியிலும் வ. ரா. ஒரு தத்துவ ஞானிபோல இருந்து கொண்டு வீரம் செறிந்த போர்வீரனைப்போலக் கருமமாற்றுகின்றார். அவர் தெளிந்த ஞானத்தின் ஊற்று. வாழ்க்கையில் உயர்வு தாழ்வு இருப்பதைக் கண்டு சகிக்க முடியாத அவருடைய உள்ளம் சமநிலை தவறுவதில்லை. சமூகத்தால் நசிக்கப்படுவோருக்கு நீதி வழங்க வேண்டுமென்பதே அவருடைய கட்சி. வ. ரா. அவர்களின் சிறந்த ஆற்றலை நாடு உணர்ந்து அவரைக் கௌரவிப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இனி, கைம்மாறு ஒன்று இருக்கின்றதே; அது வேறு விஷயம்.


விலை அறிவிப்பு

ஊட்வார்ட்ஸ் 'கிறைப் வாட்டர்'

ஊட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின் உண்மையான சில்லறை விற்பனவு விலை

ரூபா 2 ஒரு போத்தல்

[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உட்பட]

கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்

ஊட்வார்ட்ஸ் கிறைப் வார்ட்டரை நீர் வாங்கும்போது



ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்

போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!

IWW-III W. WOODWARD LTD., LONDON, ENGLAND


சிட்டுக்கவி

## எழுந்தருள்க!

— சாரதா —

1. அடிமையிலும் மிடிமையிலும் மடமையிலும்
அழுந்திமிக அல்லற் பட்டுத்
துடிதுடித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டின்
தொல்லைகளைத் துடைக்க வென்று
இடியிடித்து மழைபொழிவ தென்னநவ
கவிதைகளால் எழுச்சி பாடிப்
படியின்மிசை புகழ்பொறித்த பாரதியின்
பரம்பரையிற் பழுத்த ஈழ—

2. நவகவியே! யாழ்ப்பாண நற்பெயரைக்
காக்கவந்த நவாலி யூராய்!
சுவைமிகுந்த தமிழ்ப்புலவா! சோமசுந்த
ரப்பேராய்! தூயோய்! இந்நாள்,
அவனியிலே உன்புகழை அரங்கேற்று
வதன்மூலம், அநேக மான
கவியமுதம் பெறலாமே? ...எனுமெண்ணம்
பலநாளாய்க் கருத்துட் பட்டு—

3. வேலைசெய்து வந்ததினால், விளையாட்டா
யேனுமுந்தன் மேன்மை யான
நூலையெல்லாம் வகைக்கொன்றாய் வரவழைத்துப்
படிப்பதென்ற நோக்கத் தோடு,
பாலகவி 'சாரதா', வளர்ந்தவரைப்
பின்பற்றும் பாலர் போலிவ்
வேளையிலே, பாரதியை வழிகாட்டி
யாய்க்கொண்டு விடுக்குஞ் சீட்டு:

4. அக்காலந் தமிழ்ப்புலவர், அருள்மன்னர்
தம்புகழை அறிந்து பாடித்
தக்கபல சன்மானம் பெற்றுமிடி
தீர்த்ததுபோல், தமியேன் உந்தன்
மிக்ககவிப் புலமைகளைப் பலகாலுங்
கேட்டுணர்ந்த விருப்பி னாலே,
இக்கவியை எழுதுகிறேன்; எமதறிவுப்
பசிதீர்த்தற் கெழுந்த ருள்க!

5. பார்த்தறிவேன்; கேட்டறிவேன்; ஆனாலும்,
நேர்முகமாய்ப் பழக்க மில்லை;
கீர்த்திமிகும் புலவசிகா மணி! காலந்
தாழ்த்தாது கேட்ட வற்றைப்
பார்த்தெடுத்து உதவிடுக! தயவுசெய்து,
சிரமத்தைப் பார்க்க வேண்டாம்!
காத்திருப்பேன்; ...மேலும்புதுக் கலைமாடம்
பலவெழுப்பிக் களித்து வாழ்க!

## ரொடியர் ○ ○

**இலங்கைவள நாட்டின் கண்ணே ரொடியர் எனப் பெயர்வழங்கப்படும் ஒருசார்மாபினரும் இலங்கைப் பழங்குடி மக்களாவாரென இப்பொழுது, இலங்கைப் பழங்குடியாராய்ச்சியாளருள் ஒருசாரார் கருதுகின்றனர்.........**

'ரொடு' எனும் சிங்களச்சொல் குப்பையெனப் பொருள்படும். படவே குப்பைபோல்பவர் என்னும் பொருளான் ஒதுக்கப்பட்டார் அல்லது தாழ்த்தப்பட்டார்க்கு ரொடியர் என்பது பெயராயிற்று. இந்த ரொடியர் வாழும் சேரிக்குப் பெயர் குப்பாயம் எனப்படும். இச்சேரியின் தமிழ்ப்பெயர்ப் பொருளும் ரொடியர் எனும் சிங்களப் பெயர்ப் பொருளும் ஒன்றாகக் காணப்படுதலால், இவர்க்கு 'குப்பாயர்' என முன்னே வழங்கிய பெயரினைக்கண்டு அதன் பொருளுக்கேற்பச் சிங்களர்தஞ் சிங்கள மொழியால் ரொடியர் எனப் பெயரிட்டு வழங்கினர் என்பது மிகப் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது.........

ரொடியர், நவரத்தினவல்லி ரொடியர், நாகல்ல ரொடியர் என இருதிறப்படுவர். முற்கூறப்பட்ட நவரத்தினவல்லி ரொடியர், வன்னிப் பகுதியிற் பெரும்பாலும் வாழ்ந்துவந்தமையால், வன்னிரொடியர் எனவும் அழைக்கப்பட்டனர். தாம் உயர்ந்தகுலமெனப் பெருமை பாராட்டி மற்றக்குலத்தில் மணமுடிக்கவும் மறுத்து விடுவர். நாகல்ல ரொடியர் கண்டியைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்றமையால் கண்டிரொடியர் எனவும் அழைக்கப்பட்டனர்....

ரொடியர் இப்பொழுது சப்பிரகாம, வடமேல் ஊவா, மத்திய, தென்மாகாணங்களில் வாழ்கின்றார்கள். சிங்களர் வாழுமிடத்திலிருந்து நெடுஞ் சேய்மையில் குடிசைகட்டியிருப்பார்கள். இத்தகைய குடிசை பல கூடிய சிற்றூரினைக் குப்பாயம் என வழங்குவர். இவர்கள் பன்றி கோழி முதலியவற்றையும் வளர்ப்பதுண்டு. ஆடுமாடும் சிலர் வைத்திருப்பர். தங்களுடைய விலங்குகளை உயர்குலத்தவரின் விலங்குகளினின்றும் வேறுபடுத்தற்காகத் தம் விலங்கின் கழுத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய அரங்கம்

இளங்கோவடிகள் புலமையும் கண்ணகி கற்பும்:

# முதல், கரு, உரிப் பொருள்கள்

சென்றவாரத் தொடர்ச்சி

8. உரி. 1. பண்டிதர் அவர்கள் தொல்காப்பியனார் கூறிய உரிப்பொருளை, உணர்ச்சி (உரி) எனக்கூறி விளக்குகின்றார். இதனை, "ஒரு உணர்ச்சியாகிய உரிப்பொருளை முகந்த புலவன், அதனை வெளிப்படுத்தற்கு முதல் கரு ஆகிய சந்தர்ப்பங்கள் பாத்திரங்களை நாடுகின்றான்" என வரும் அவர்கள் கூற்றினால் உணர்க. தொல்காப்பியனார் உரியை, உணர்ச்சி யென யாண்டுங் கூறிலர். உரியென்பது, திணைக்கு (ஒழுக்கத்துக்கு) ரிய பொருள் என்பதே அவர் கருத்து.

"புணர்தல் பிரிதல்
இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின்
நிமித்தம் என்றிவை
தேருங் காலைத்
திணைக்குரிப் பொருளே"
(தொ. அ. 14)

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஊடலும் ஊடல் நிமித்தமும், என்ற பத்தும் ஆராயுங்காலை ஐந்திணைக்கும் உரிய பொருளாம் என்றவாறு என்பது நச்சினார்க்கினியர் உரை. "உரிப்பொருளாவது திணைக்கு உரிய பொருள் என்றவாறு" என்பது நக்கீரனார் உரை. ஆனால், பண்டிதர் அவர்கள் உரிப்பொருளுக்கு உணர்ச்சி எனப் புதுப் பொருள் காட்டுகின்றார்கள். புணர்தல் முதலிய உரிப்பொருள்களை உணர்ச்சியெனக் கூறுதல் எங்ஙனம் பொருந்தும். தொல்லாசிரியர் ஆட்சியில், உரிப்பொருள் என்பது, உணர்ச்சியெனும் பொருளில் ஆளப்படவில்லை.

2. உணர்தல் என்பதை அறிதல் எனும் பொருளினிலேயே தொல் ஆசிரியர்கள் ஆட்சிப்படுத்தியிருக்கின்றனர். "உய்த்துணர்வின்றி" (தொ-செ.516) "... ஊடலும் உணர்வும்" (தொ-செ. 499) "உணர்த்திசினோரே" (தொ-செ.413) "பாங்குற உணர்ந்தோர்" (தொ-செ. 363) எனும் தொல்காப்பிய நூற்பாக்களின் உரையை நோக்கியுணர்க.

தொல்-செ. 499-ம் நூற்பாவில் "ஊடலும் உணர்வும்" என உணர்வை ஊடலின் வேறாக வைத்துக் கூறுதலொன்றே புணர்தல் முதலிய உரிப்பொருள்களை உணர்ச்சி யெனக் கொள்ளுதல் தொல்காப்பியனார் கருத்தன்றென்பதை நன்கு விளக்கும். ஊடல் மருதத்திணைக்குரிப் பொருளாகும். "ஊடல் என்பது, உள்ளத்து நிகழ்ந்த திணைக்குறிப்புமொழியானன்றிக் கூற்றுமொழியானுரைப்பது," எனவும், "அங்ஙனம் ஊடல் நிகழ்ந்த வழி அதற்கேதுவாகிய பொருளின்மை உணர்வித்தல் உணர்வெனப்படும். இல்லது கடுத்த மயக்கந் தீர உணர்த்துதலால் உணர்வெனவும் படும்" எனவும் பேராசிரியர் கூறும் உரையானும் உணர்க. எனவே புணர்தல் முதலிய உரிப்பொருள்கள் ஐந்தும் திணைக்குரிப்பொருள்கள் திணை-ஒழுக்கம். புணர்தலாகிய ஒழுக்கம் பற்றித் தோன்றும் உணர்ச்சி புறத்தார்க்குப் புலனாகுமிடத்து மெய்ப்பாடு எனப் பெயர் பெறும். புணர்தல் எனும் திணைக்குரிப் பொருளை உணர்ச்சி யெனல் பொருந்தாது.

"அல்குல் தைவரல்" (263. தொ. மெ.) எனும் நூற்பாவின்கண், தலைவியின் புணர்தல் வேட்கை மிக்க உணர்ச்சி புறத்தார்க்குப் புலப்படுமாற்றைப் பேராசிரியர் விளக்கிக் கூறுகின்றார். இரு கையும் எடுத்தல் என்பது, "அங்ஙனம் படைத்துக்கொண்ட வலியானும், தடுக்கப்படாது நிறையழிதலிற் கைகள் தாமே முயங்கல் விருப்பத்தான் எழுவனபோல் குறிப்பு" பேராசிரியர் உரை. இதனால் புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்கல் எனும் திணைக்குரிப்பொருள்களை, உணர்ச்சியெனக் கூறுதல், பொருளதிகார மரபாகா தென்பதும், திணைக்குரிப் பொருள்களின் இடமாகத் தோன்றும் உணர்ச்சியை மெய்ப்பாடு எனக் கூறுதலே பொருளதிகார மரபென்பதும் கூறினும். பண்டிதர் அவர்கள் உரிப் பொருள்களை, உணர்ச்சியெனச் சுட்டிக் கூறியது பெரும் வியப்பாகும்.

வித்துவான்
— க. வேந்தனார் —

9. இனி இங்ஙனம் முதல், கரு, உரிப் பொருள்களுக்குப் புதுப் பொருள் கற்பித்த பண்டிதர்அவர்கள், இலக்கியத்திற்கும் புதிய விளக்கம் கூறுகின்றார்.

முதல் இன்றியும் உரிப் பொருள் பாடலுட் பயின்றுவரும் எனும் தொல்காப்பியர் கருத்தைப் பொருத்திக் காட்ட விரும்பிய பண்டிதர் அவர்கள் "சிலசமயம் உயர்ந்ததொரு உணர்ச்சியை அஃதாவது உரியைப் புலவன் முகந்துகொள்ளுகின்றான். உயர்ந்த பாத்திரமும், இருக்கின்றது. ஆனால் அந்தப் பாத்திர மூலம், அவ் வுணர்ச்சி வெளியான சந்தர்ப்பம் இல்லை. குறித்த உணர்ச்சியை வெளிப்படுத்தக்கூடிய தகுதி பாத்திரத்துக்கு இருக்கிறது" என விளக்கங் கூறுகின்றார்.

1. இவ் விளக்கத்தில் புதுமை யொன்றும் இல்லை. முதலைச், சந்தர்ப்பம் என வைத்துக்கொண்டு சந்தர்ப்பம் இன்றியும் பாத்திரமும் உணர்ச்சியும் தோன்றுமெனக் கூறுகின்றார்; இவ் விளக்கத்தால் போந்த பயன் தொல்காப்பியனார் கருத்தை— முதல் இன்றியும் உரிப்பொருள் பாடலுட் பயின்றுவரும் எனும் அகத்திணை மரபைத் திருப்பி வேறு சொற்களால் வளைத்து, வளைத்து எழுதியதேயாகும்.

2. "புலவன் முகந்து கொண்ட உணர்ச்சி—உரி—மிக உயர்ந்ததாய் உலக பாத்திரங்களில் வைத்துக் கூறக்கூடாத பரிசுத்தமானதாகலாம். அப்படிப்பட்டதைப் புலவன் அசுத்த பாத்திரத்தில் சுமத்தி அசுத்தப்படுத்தாமல் x y யில் வைத்து வெளிப்படுத்துகின்றான். x அப்பன். y அம்மை. தலைவன், தலைவி." என அன்பின் ஐந்திணை இலக்கியங்களின் இலக்கணத்தைத் தொல்காப்பியனார் விளக்கிய முறையைப் புதுக்கித் தாமோர் புது இலக்கிய அமைப்பினை ஆராய்ந்து காட்டுவது போல எழுதுகின்றார். பண்டிதர்கூற்றில் ஒரு புதினமும் இல்லை. மரபு நிலை திரிந்த மாற்றமே காணப்படுகின்றது.

"மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர் பெயர் கொளப்
பெறாஅர்"

மக்களே தலைமக்களாகக் கருதற்குரிய நடுவணைந் திணைக்கண்ணும், திணைப் பெயராற் கூறினன்றி ஒருவனையும் ஒருத்தியையும் விதந்து கூறி அவரது இயற்பெயர் கொள்ளப் பெறார் என்றவாறு, என்பது நச்சினார்க்கினியர் உரை.

3. யாதேனும் ஒரோவழி ஒரு சாரார் மாட்டு நிகழும் ஒழுக்கத்தை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்கின்ற ஐந்திணை ஒழுக்கத்தைக் குறிப்பிட்ட ஒரு தலைவனுக்குந் தலைவிக்குமே உரியதாக, அவர்களின் இயற்பெயர் காட்டிக் கூறுதல் தொல்லாசிரியர்கள் மரபன்று என்பதே கருத்து. இதனாலேயே அகத்திணை பற்றி வந்த நூல்களில் எல்லாம் தலைமக்களின் இயற்பெயர் கூறாது, தலைவன் தலைவி யெனப் பொதுப் பெயர் கூறும் புலநெறி வழக்கைக் காண்கின்றேம்.

4. பண்டிதர் அவர்கள் "இதனைத் திரித்துச்" சுட்டி யொருவர்ப்பெயர்கொளப் பெறாததன் காரணம் "புலவன் முகந்த உரி—மிக உயர்ந்ததாய் மிகப் பரிசுத்தமாகலாமென்றும்," அப்படிப்பட்டதனைப் புலவன் உலக பாத்திரத்தில் வைத்துக் கூறவிரும்பாது — அசுத்த பாத்திரத்திற் சுமத்தி அசுத்தப்படுத்தாமல் x. y. ல் வைத்து வெளிப்படுத்துகின்றார். x அப்பன். y அம்மை. தலைவன தலைவி என கூறுகின்றார்.

5. அகத்திணை யொழுக்கத்தினை எவர்க்கும் பொதுவாகக் கூற வேண்டுமென்ற கருத்தினால் சுட்டி யொருவர், பெயர் கொளப்பெறாது கூறுதல் ஆசிரியர் கருத்தன்றி உலகபாத்திரம் அசுமான தென்று கருதிப் பொதுவாகத் தலைவன் தலைவியெனக் கூறுதல் ஆசிரியர் கருத்தன்று. பண்டிதர் அவர்கள் அகத்திணை மரபு திரித்துக் காட்டிய காரணம் சிறிதும் பொருந்தாது:

6. ஆசிரியர் நச்சினார்க்கினியர் அகத்திணையியல் 3-ம் சூத்திர வுரையில் "இஃது இல்லதெனப்படாது, உலகியலேயாம். உலகியலின்றேல், ஆகாயப் பூ நாறிற்றென்றுழி அது சூடக் கருதுவாருமின்றி, மயங்கக் கூறினானென்று உலகம் இழித்திடப் படுதலின் இதுவும் இழித்திடப்படும். இச்செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



Copyright: Horlicks Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரம் ஒரு கலை

அத்தியாயம் 13

**இடைக்கார ஜாதியினர் என்று தங்களைச் சொல்லிக் கொள்வதில் இலங்கை மக்கள் ஒருபோதும் பெருமை அடித்துக்கொண்டதேயில்லை.**

கை கால் முகஞ் சுத்தி செய்வதை ஒரு கலையாக்கிக் கொண்டால், உழுதுண்டு வாழும் ஒருவர் அரியணையேறி மணிமுடி தரித்துச் செங்கோலோச்சுவதற்குப் பெரிதும் தகுதி வாய்ந்தவர். அப்படியிருந்தும் வியாபாரத்தின் இரகசியங்களை அறிந்து கொள்ள அவர் விரும்பவில்லை. இவர்களுக்குக் கணக்குப் பதிவதைப் பற்றியோ, இரட்டைப் பதிவுமுறைபற்றியோ எவ்வித அக்கறையு மிருக்கவில்லை.

வியாபாரி மாத்திரம் எங்கள் சாதிக் கட்டுப்பாட்டாற் பாதிக்கப்படவில்லை. விவசாயி, மீன்பிடிகாரன், பொற்கொல்லர் போன்ற எத்தனையோ வகுப்பினர் சாதிக் கட்டுப்பாட்டுக்குள் அமைந்துள்ளனர். ஆனால், வியாபாரியோ தனிக் காட்டு இராஜா. இந்த விஷயத்தில் இலங்கை மக்கள் இந்தியாவிலும்பார்க்க மூளைப் பலத்தில் எவ்வளவோ மடங்கு மேம்பாடு உடையவர்கள்.

## கடனுக்குப் பயந்தா ?

விஜயனும அவனுடைய சகாக்களும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்தனர் என்பது பலருமறிந்த உண்மையாகும். விஜயன் ஓர் இளவரசனுவான். அவனுடைய சகாக்கள் போர்வீரர்களாவார்கள். அரசியற் காரணங்கள் நிமித்தம் இவர்கள் ஒரு பெருங் குழுவாகி ஒன்றுபட்டனர். இவர்களைச் சேர்ந்தவர்கள் இப்போது பேசாமல் இருக்கின்றனர். ஆனால் என்றோ ஒருநாள் இவர்கள் ஸ்ரீ லங்காவில் உதித்த சுதந்திர சூரியனின் ஒளிமயத்தில் மூழ்கிக்கொள்ளவற்காக வெளிவருவார்களென்பது திண்ணம்.

இது விஷயம் எதுவாக இருந்தாலுஞ் சரி, வியாபாரத் துறையில் ஈடுபட்ட எவரும் விஜயனுடன் இலங்கையில் நுழையவில்லையென்பது மட்டும் உண்மையாகும். இந்தியாவிலுள்ள வியாபாரிமாரின் கடனுக்குப் பயந்தே, விஜயனும் அவனது சகாக்களும் இலங்கைக்குத் தப்பியோடினர் என்ற கொள்கை ஒன்று நிலவி வருகின்றது. இது மிக்க சுவைதரும் ஒரு செய்தியாயிருப்பினும், இதுவரை ஒருவரும் இதை ஆதாரங்களுடன் நிலைநாட்டவில்லை. வியாபார நிலையங்களின் வருமதி உண்டியல்களைக்கொண்டும் நாங்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

## அடிவைக்க முடியவில்லை

விஜயன் தனது ஆட்சியை இலங்கையில் நன்கு ஸ்தாபித்தவுடன் குடியேற்றச் சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவந்தான். ஆகவே, நூற்றாண்டுகளாக இந்திய வியாபாரிமார் இலங்கையில் அடி வைப்பதுதானும் பரம கஷ்டமாகவேயிருந்தது. இது காரணமாக வியாபார வர்க்கத்தினர் என்ற ஒரு வகுப்பினர் இலங்கையில் முளை கொள்ளவில்லை. ஆனால் இந்தியாவிலோ இத்தகைய ஒரு வகுப்பினர் எங்கும் பரந்திருக்கின்றனர்.

இதை ஆதாரமாகக்கொண்டு, ஸ்ரீ லங்காவிலுள்ள மக்களுக்குச் சந்தைப்பக்கம் போவதென்றால் அவர்களுக்குச் சரியான அருவருப்பு எனக் கருதவேண்டியதில்லை. புறக்கோட்டைப் பக்கம் போங்கள். யோக் வீதிப்பக்கம் போய்ப் பாருங்கள். அங்கெல்லாம் கூட்டங் கூட்டமாய் நின்று இலங்கை மக்கள் சாமான்கள் வாங்குவதைக் காண்பீர்கள். இவர்கள் சில்லறைச் சாமான்கள் வாங்குவதில்லை. உயர்ந்த பொருள்களையே வாங்குவார்கள். இதிலேதான் அவர்கள் தங்கள் சொந்த மேதையையும் வெளிக்காட்டுகின்றனர்.

பெரிய திருவிழாக்களை முன்னிட்டு நாங்கள் ஏற்கனவே வியாபார ஸ்தாபனங்களைப் படையெடுக்கத் தொடங்கிவிடுவோம். வருடாந்தக் குதிரைப் பந்தயத் திருவிழா ஆரம்பிக்க முன்னதாகவே பெண்மணிகள் பிரபலமான கடைகளை முற்றிக்கையிட்டுக் கொள்வார்கள். அப்படியானுற்றான் நல்ல வர்ணஜாலங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். மலிவு விற்பனவு காலத்தில் வியாபாரிகள் போதிய கழிவு கொடுப்பார்கள். அவர்களையும் ஆதரித்து இவர்கள் ஏனையோரைத் திணறச்செய்வார்கள்.

## ஒரு நன்மை

இனிப் பாருங்கள், பற்று வரவுத் திட்டம் ஒன்று இருக்கின்றது. இது வாடிக்கைகாரர்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டது. கணக்கப்பிள்ளை யிருக்கும் ஜன்னலுக்கு முன்பாகச் சென்று காசு கொடுப்பதென்றால் அது அவ்வளவு இதமான வேலையல்ல. இது கலாசாரக் குறை வாகிக் கொள்ளும். 'நாய் தின்னுத காசு' என்று சொல்லுவார்கள். நாங்கள் சிலவேளைகளில் அச் சொற்றொடரைப் பற்றி மறந்து விடுகின்றோம். கடைக்காரரும் இதே கருத்துள்ளவர்களாகையால் இத்துறையில் எமக்கு ஊக்கமளிக்க விரும்புகின்றனர். உயர்ந்த அந்தஸ்துப் படைத்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இக் கடைக்காரர்கள் கடன் கொடுக்க விரும்புகின்றனர். வாடிக்கைக்காரர், பேசுந்திரியை எடுத்துப் பேச வேண்டியதுதான் கடைக்காரர் கணக்குப் புத்தகத்திலே எழுதிவிட்டு அடுத்தகணம் கேட்ட சாமான்களை வீட்டுவாயலுக்கு அனுப்பிவைப்பார்கள்.

இந்தப் பற்று வரவு விஷயத்தில் இன்னுமோர் நன்மை இருக்கின்றது. இது சகலருக்குங் கிடைக்கும் ஒரு பெருமையன்று. பெரிய வியாபார ஸ்தாபனங்களிலுள்ள கணக்குப் புத்தகங்களில் ஒருவரின் பெயர் அடிபடுவதாகில் அவர் சமூகத்திலும் ஒருபடி உயர்ந்து விடுகின்றார். அதாவது கண்ணியம் வாய்ந்த புண்ணிய சீலனுகிவிடுகின்றார். ஒருவர் நண்பர்களுடன் சும்மா பேசும்போது தான் வாங்கிய சாமானின் விலையையுங்குறிப்பிடுகின்றார். அந்த நண்பன் அதே சாமானைச் சில்லறைக் கடையொன்றிற் குறைந்த விலைக்குப் பெற்றுள்ளார். அப்படியிருந்தும் அதிக பணங் கொடுத்துப் பெரிய கடையில் வாங்கியவரின் பெருமையை உணர்ந்து 'கப்சிப்' என்று இருந்துவிடுகின்றார்.

> வியாபாரத்துக்கும், இலங்கை மக்களுக்கும் வெகு தூரம். இதுகாரணமாக இந்தியர்கள் ஸ்ரீலங்காவிற் பணமீட்டினர். இவற்றையெல்லாம் இங்கு ஜாக்கஸ் ஆராய்ந்துள்ளார். இக்கட்டுரை டைம்ஸ் ஒவ் சிலோன் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாயிற்று. —ப.ர்.

## மாற்றம்

இதே நிலைமைதான் சிறிது காலத்துக்கு முன்னர் இலங்கையில் நிலவிவந்தது. இப்போது ஸ்ரீலங்காவில் ஒரு சிறிய மாற்றம் உண்டாகியிருக்கின்றது. தேசியப் பொருளாதாரப் பண்பே இதற்குக் காரணம். எங்கள் மத்தியில் நடைபெற்று வருங் காரியங்களை யெல்லாம் எங்களிற் சிலர் நன்கு உணரலாயினர். சாமான்கள் வாங்குவதில் எங்களை வேறு எவரும் உச்சிவிட முடியாது. நாங்கள் அதை ஒரு கலையாக்கிக் கொண்டோம். நாங்கள் சாமான்கள் வாங்குவதிற் பெறும் இலாபத்தை அவற்றை விற்பனவு செய்பவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தால் அவர்கள் மேலுமதிகமாக விற்பனை செய்வதற்கு முயலுவார்கள். இப்படிச் சாமான் வாங்குபவர்கள் கருதுவதுண்டு.

## நவீன ஆராய்ச்சி

இந்த ஆசை வெகு இலகுவில் நிறைவேறி விடுவதில்லை. பற்றுவரவு வைத்துக் கொள்பவர்கள், பிறருக்கு அந்தச் சலாக்கியத்தை உதவுவதற்கு முன்வரமாட்டார்கள். இரட்டைப் பதிவு முறையை அனுஷ்டித்துக் கணக்குப் பதிவு செய்து கொள்வது இலங்கை மக்களுக்கு ஒரு அருவருப்பான காரியமாகிவிட்டது. இக்கஷ்டத்தைத் தான் ஒருவாறு சமாளித்த போதிலும், பண்பாடு மிகுந்த மனப்பக்குவம் உண்டாகவேயில்லை. நாங்கள் உயர்ந்த மனிதர்களாகையால் இந்திய விற்பனவுகாரரின் சாகசங்கள் எம்மிடத்திற் காண்பதற்கில்லை. இந்திய விற்பனவுகாரன் கையால் எடுக்கும் சாமானை ஏதோ ஒருவிதமாகக் காசாக்கி விடுகின்றான். எங்கள் விற்பனவுகாரர்கள் அப்படியே எடுத்து விசுக்கி விடுவார்கள். விரும்பினல் எடுக்கவேண்டியது; இல்லாது போனாற் போக வேண்டியது. பக்கத்தில் இல்லாத ஒரு சாமானை ஒருவர் கேட்டால் எங்கள் நாட்டு விற்பனவுகாரருக்குப் பிடியாது. ஆகவே, நெருப்புப் பறக்கும் ஒரு பார்வை பார்ப்பார்கள். விற்பனவுகாரனுக்கு வேண்டியது சப்பளந்தான். கடை தனக்குச் சொந்தமாக வில்லாதபோது விற்பனையைப் பற்றி அவனுக்கு என்ன அக்கறை ?

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# நீர்வீழ்ச்சி மின்சாரம்

## நாட்டுக்கு நல்ல திட்டம்

— ச. ஆறுமுகராசா —

ஒரு நாட்டின் பொருளாதார விருத்திக்கு மின்சாரத்தை இலகுவிற் பெறும் சௌகரியங்கள் இருப்பது மிக முக்கியமாகும். நிலக்கரி, எண்ணெய் என்பவற்றை உபயோகிப்பதாற் செலவு அதிகமாவது மாத்திரமன்றி, தொழிற்சாலைகளும் எந்திரங்களும் அநாவசியமாகப் பாதிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் மின்சார சக்தியினுல் நிவிர்த்தியாக்க முடியும். மேலைத்தேசங்களிற் கைத்தொழில் அமோகமாக அபிவிருத்தியடைந்ததற்கு மின்சாரசக்தியே முக்கிய காரணம். மின்சார சக்தியை நீர்வீழ்ச்சியினுல் ஏற்படுத்துதல் மிகவும் பொருள் வருவாயைத் தரக்கூடிய சிறந்த முறையாகும். அழகான எமது இலங்கைத் தீவுக்கு விசேஷ ரமணீயத்தை யளிக்கும் மலைநாட்டில் தொகையான நீர்வீழ்ச்சிகள் மலிந்து கிடக்கின்றன. அந்நீர் வீழ்ச்சிகளை ஒன்றுகூட்டி உபயோகிப்பதன் மூலம் இலங்கையின் தேவைக்கு மேலதிகமான மின்சாரத்தை ஏற்படுத்த முடியுமென்று ஆராய்ச்சியாளர் முடிபு செய்கின்றனர். எல்லா நீர்வீழ்ச்சிகளிலும் தலைசிறந்தவை அபடீன், லக்ஸபானு என்னுமிரண்டுமே. இவ்விரு நீர்வீழ்ச்சிகளின் மூலமாக மின்சாரத்தை ஏறபடுத்தும் இ[illegible] வில் ஆரம்பிக்க[illegible]தால் அத்திட்டத்தை ஒட்டியே நமது அவதானத்தைச் செலுத்துவோமாக.

## 1917-ம் ஆண்டில்

மேற்கூறிய இரு நீர்வீழ்ச்சிகளும் களனிகங்கையின் கிளை நதிகளிலேயே ஏற்படுகின்றன. சிவனொளிபாதமலைக்கு அணித்தாகவுள்ள 6000 அடி உயரமான பீடபூமியிலிருந்து, கெஹல்கமு ஓயா, மஸ்கேலியா ஓயா என்னும் அவ்விரு அருவிகளும் உற்பத்தியாகிச் சமாந்தரமான இரு பள்ளத்தாக்கு வழியாகப் பாய்கின்றன. அவ்விரு அருவிகளும் மலைநாட்டின் எல்லையை விட்டு நீங்கி ஏறக்குறைய 400 அடிக்குக் கீழாகத் தாழ்ந்த நிலத்தையடையும்போதுதான் இரு நீர்வீழ்ச்சிகள் உண்டாகின்றன. கெஹல்கமு ஓயாவில் ஏற்படும் நீர்வீழ்ச்சி, அபடீன்; மஸ்கேலியா ஓயாவிலேற்படுவது லக்ஸபானு. இவ்விரு நீர்வீழ்ச்சிகளின் சக்தியையும் உபயோகித்து மின்சாரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் 1917-ம் ஆண்டில் திட்டம் போட்டது. பலவித கஷ்டங்களினுலும் அத்திட்டம் இன்னும் பூரண முடிபுக்கு வரவில்லை. தற்போதைய போக்குவரவு மந்திரி [illegible] ஊக்கத்தினுல் மேற்படி திட்டம் பூரணமுடிபுக்கு விரைவில் வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக வேண்டிய முயற்சிகளும் துரிதமாக நடைபெறுகின்றன.

## வரலாறு :

**1917–18-ம்** ஆண்டுகளில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, இலங்கையின் பொருள் நிலைமைக்கும், தேவைக்கும் அது மிகவும் மேலதிகமானதென அதிகாரிகள் கருதியமையால் அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர். பின்பு ஸ்ரீ டீ. ஜே. விமலசுரேந்திரா 1923-ல் ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டமே இப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட் டிருக்கின்றது. இத்திட்டத்தின்படி, அபடீன் நீர்வீழ்ச்சியுடன் கெஹல்கமு ஓயாவிலிருந்தும், லக்ஸபானு நீர்வீழ்ச்சியுடன் மஸ்கேலியா ஓயாவிலிருந்தும் சக்தியை எடுக்கவேண்டும். முறை முறையாக நான்கு படிகளின் மூலமாக அதனை முற்றுப் பெறுவிக்கலாம்.

1. அபடீன் நீர்வீழ்ச்சியின் மிகக்குறைந்த பெருக்குடன், நோட்டன் அணையில் நீரைச் சேமித்து ஒழுங்குபடுத்துதல் மூலமாக அபடீன் நீர்வீழ்ச்சி ஸ்தானத்தைப் பெருப்பித்தல். நோர்டனில் ஓர் அணையைக்கட்டி, அங்கிருந்து நீர்ச்சேமிப்பறை (Surge Chamber) வரையும் சுரங்கமொன்றை ஏற்படுத்தி, குழாய்கள் மூலமாக மஸ்கேலியா ஓயாவிலிருக்கும் மின்னிலையத்துக்கு வேண்டிய நீரை எடுப்பதனுல் மேற்கூறிய முதலாம்படி பூர்த்தியாக்கப்படும்.

2. கெஹல்கமு ஓயாவின் மேலே இன்னுமொரு நீர்ச்சேமிப்பை அமைப்பதன் மூலமாக முதலாம் படியினுல் ஏற்படுத்தப்பட்ட சக்தியைக் கூட்டுதல்.

3. மஸ்கேலியா ஓயாவின் நீர்ச்சக்தியை உபயோகித்தல். இதற்கு அந்நதியில் எல்பின்டேல் என்னும் இடத்தில் இன்னுமோர் அணையைக்கட்டி அங்கிருந்து ஒரு சுரங்கத்தை ஏற்படுத்தி நோர்டன் சுரங்கத்துடன் சேர்த்தல்.

4. மஸ்கேலியா ஓயாவில் இன்னும் மேல்பக்கத்தில் கென்ரையர் என்னும இடத்தில் ஒரு நீர்ச்சேமிப்பை ஏற்படுத்தி அந்தச் சக்தியை இன்னும் கூட்டுதல்.

இந்த நான்கு படிகளிலும் முதற்படியே இப்போது ஆரம்பிக்கப்பட் டிருக்கின்றது. இதை இன்னும் நன்கு விளங்கிக் கொள்வதற்குச் சில உண்மைகளை நாம் இன்னும் அறிய வேண்டும்.

## நீர்ச்சேமிப்பு

ஓடும் நீருக்குச் சக்தியுண்டு. அந்நீரை ஒரு சில்லின்மேல் பாயவிடும்போது அந்தச் சில்லு நீரின் வேகத்தாற் சுற்றப்பட்டு அதன்மூலமாக மின்சாரத்தை உண்டாக்கும் எந்திரங்கள் இயக்கப்படுகின்றன. ஆகவே, நீர்வீழ்ச்சியால் மின்சாரத்தை என்றும் உண்டாக்குவதற்கு என்றும் ஒரே அளவான நீர் தேவைப்படுமென்பது புலனுகும். பருவகால மழை வீழ்ச்சியின் வித்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்த்துக்கள்

★

ஈழகேசரி வாசகர்களுக்கும், விளம்பர கர்த்தாக்களுக்கும், விற்பனையாளருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்.

# ஈழகேசரி

சுன்னாகம், சர்வதாரி ஐப். கரு

— காந்தி ஆண்டு 80 —

## தேசபாஷையும் தடுமாற்றமும்

இலங்கைவாழ் மக்களாற் பேசப்படும் பாஷைகளிலேயே அரசாங்கம் நடத்தப்படவேண்டுமென்பதுபற்றி இருவேறு அபிப்பிராயங்கள் கிடையா. உண்மையாக நம் நாடு உயர் நிலையை விரைந்து அடையவேண்டுமாயின், தாய்ப்பாஷை மூலங் கல்வி கற்றுக் கொடுக்கப்படும் முறை தாமதமின்றி அனுசரணைக்கு வரவேண்டும். மிக்க வேகமாகச் சென்றால் தீமைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள் என்பன வந்து சேருமென ஒரு சாரார் எப்போதும் எச்சரிக்கை செய்த வண்ணமாகவே நிற்கின்றனர். பாஷை விஷயத்திற் பெரிய புரட்சிகள் ஏற்படும்போது கஷ்டங்கள் வராது போகுமா? இதற்காகச் செய்யுந் தொண்டுகளைச் சோர விடுவதா? என்றும் பயந்து கொண்டு நிற்பின் விரும்பிய திருத்தங்கள் ஒருபோதுங் கைகூடப்போவதில்லை. தாம் பழகியதையும் கற்றுக் கொண்டதையும் கைவிட விரும்பாமையாற்றான், சிலர் இம்முறைகளைக் கையாள்கின்றனர்.

கொழும்பு நகரில் நடைபெறும் ஓர் ஆங்கிலத் தினசரி, ஆங்கில பாஷைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சி இடைவிடாது முட்டைக் கண்ணீர் வடிக்கின்றது. சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாம். அவர் சொன்னார்; இவர் சொன்னாரென்று சாட்சிகளையும் எடுத்து விடுகின்றது. ஆங்கிலமொழி மூலங் கற்றாற்றான் நாட்டினை உயர் நிலைக்குக் கொண்டுவரலாமென்பதும் இப்பத்திரிகையின் கோட்பாடு. இப்பத்திரிகை இவ்வளவாக ஆங்கில மொழிக்காகப் பரிந்து பாடுபடுவது எதற்கென எமக்கு விளங்கவில்லை. தமது பத்திரிகை ஆங்கிலத்தில் நடத்தப்படுவது பற்றியா? அப்படியாயின் இலங்கையில் மாத்திரமன்று இந்தியாவிலும் நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றனவே. காலத்துக்கும் நிலைக்கு மேற்ப இப்பத்திரிகைகள் ஒரு கால் தேசபாஷைப்பத்திரிகைகளாக மாறவேண்டியது தான். அதை யாவர் தான் தடுக்கவியலும்?


தேச பாஷைகளை அரசாங்க பாஷையாகக் கொள்வதென்ற அரசினர் கொள்கையை விரைந்து அனுட்டானத்திற் கொண்டுவர வேண்டியதுதான். ஒரு கொள்கையை அங்கீகரிப்பது மாத்திரம் போதாது. அங்கீகரித்த உயரிய கொள்கையை அனுட்டானத்தில் நிலைபெறச் செய்வதே ஏற்றமுறையாகும். இதை இலங்கையரசினர் மறந்துபோகக்கூடாது. இதுவரையும் இலங்கையின் கல்வி முறையை வகுக்குங் கால் மிக்க ஆதிக்கஞ் செலுத்திவந்த, கிறீஸ்த சங்கத்தினர் இப்போது ஆங்கில பாஷைக்கு ஆதிக்கம் இல்லாமற் போவதைக் கண்டு மனக் கசப்படைகின்றனர். வேகமாக மாற்றம் ஏற்படக் கூடாதென யாழ்ப்பாணத்துக் கல்லூரிப் பரிசளிப்பொன்றில் பிரதமாசிரியர் குறிப்பிட்டார். விரைவில் மாற்றங்கள் ஏற்படின் பெருநட்டம் நாட்டிற்கு ஏற்படுமென எச்சரிக்கையுஞ் செய்தார். உண்மையாக இவர் கருதியது நாட்டின் சேமமன்று. ஆங்கில மொழியின் ஆதிக்கம் குறைகின்றதென நினைந்து அவர் வருந்துகின்றார். இவர் போல் இன்னும் அநேகர் நாட்டிலுளர். இவர்கட்காகத் தேச பாஷைகள் பிரதம நிலையை அடையாதிருப்பதா? நவயுகம் உதிக்கும்போது புரட்சிகளும் ஏற்படுவது இயற்கை. இக்காலத்தில் முட்டுக்கட்டைகள் சாத்திப் பெறும் பயன் யாதோ?

இலங்கை யரசினர் பத்து வருட காலத்துள், பல்கலைக் கழகக் கல்விதானும் தேச பாஷை மூலம் கற்றுக்கொடுக்கப்படவேண்டுமெனத் திட்டம் வகுத்துள்ளார். இக் கால எல்லைக்குள் இவ் விஷயம் முடிவடையுமா என்று மேற்படி பத்திரிகைகளும், சில பாதிரிமாரும், மேலைத் தேச நாகரிகத்தில் மயங்கிய சில நாட்டுத் தலைவர்களும் கேட்கின்றனர். இக்கேள்விகளை இவர்கள் கிளப்ப வேண்டிய அவசியம் யாதோ? தொடங்கிய அரிய தொண்டினை நடத்திச் செல்வதல்லவா முறை. குறித்த காலத்துள் முடிவடையாவிடின் வேண்டுமாயின் காலத்தை நீடிக்கலாமே. அதை விட்டுத் தமது அந்தரங்க நயங்களைக் கருதி ஆரம்பத்திலே முட்டுக் கட்டைகளும் எச்சரிக்கைகளும் செய்து நிற்பது உண்மைத் தோசாபிமானத்துக்கு இலக்கணமாகுமா? ஆகையால், அரசினரும் மற்றையோரும் இவ் விஷயத்தில் அளவு கடந்த ஊக்கத்துடன் வேண்டிய வேண்டிய முயற்சிகளைக் கையாள்வதே முறை எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. சிற்சில குறை குற்றங்கள் ஏற்படினும் அவைகளைப் பின் திருத்திக் கொள்ளலாம். அதைவிட்டு அஞ்சி நின்று மெல்ல மெல்லச் சென்றால் இந்த அவசிய நன்மை விரைவில் ஏற்படமாட்டாது. அத்துடன் ஐரோப்பிய நாகரிக பக்தர்களின் வீண்பிதற்றலுக்கும் அரசினர் செவிசாயாது விடுவது நலம்.

## இராச விசுவாசம்!

இப்போது லண்டனில் நடைபெறும் வைபவங்களை உலகம் நோக்கிக் கொண்டிருக்கின்றது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், பழைய முறையில் இனிமேலும் நிலைபெறுவது அசாத்தியம். ஏகாதிபத்தியத்துள் அடங்கியிருந்து பிரிட்டிஷாரின் நட்பினைப் பெற வேண்டுமென்ற நியதிக்கும் எல்லை வந்துவிட்டது. இதைப் பிரதமர்களின் மகாநாடும் அங்கீகரித்துளது. இவ் விஷயமாக இந்திய அரசினரும் அயர்லந்து அரசினரும் தத்தம் அபிப்பிராயங்களை மிகத் துணிவாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளார். இது இப்படியாக இலங்கையரசாங்கப் பிரதிநிதிகளாகச் சென்றோர் பிரிட்டிஷ் அரசினர்மீது அளவு கடந்த விசுவாசங் காட்டிப் பேசியது மிக விந்தையாகின்றது. இலங்கை மக்கள் அரசர் பெருமான்மீது பெரிதும் விசுவாசமுடையரென இலங்கைப் பிரதிநிதிகள் சபைத் தலைவர் திரு. மொலமுரே உருக்கமாகக் கூறினர். இந்த முறையைப் பின்பற்றியே பிரதமர் சேனநாயகாவும் வேறு சிலரும் ஏகாதிபத்தியத்தில் ஆர்வமும் அக்கறையுங் காட்டிப் பேசினர். இவர்கள் காட்டிய ஏகாதிபத்திய மோகம் அளவுக்கு மிஞ்சிவிட்டதாகவே கருதப்பட வேண்டும். பலவிதத்திலும் இன்றியமையாத நீண்ட தொடர்புடைய இந்தியாவுடன் இச் சிங்களத் தலைவர்கள் நெருங்கிய தொடர்பினை நாட்ட முயல்வதாகக் காணோம். ஆங்கில நாகரிகத்தில் மோகங்கொண்ட இத்தலைவர்கள் ஏகாதிபத்தியத்தைக் கட்டியணைப்பது நூதனமன்று.

## பாதை ஓரத்தில்




தீபாவளி மீண்டுமோர் முறை வந்துவிட்டது. தீபாலங்காரங்களுடனும், பட்டாசுகளுடனும், பூமத்தாப்புகளுடனும் இவ்விழாவைக் கொண்டாடுவது மட்டும் போதாது. அதுவும் ஓரளவுக்குச் சுதந்திரம் பெற்றுள்ள இலங்கை இனி, பொருளாதார சுபிட்சத்துக்கு வழிவகைகள் தேடுவதேயன்றி, வெறும் வெடிச் சத்தங்களுடன் திருப்தியடையக்கூடாது. மத்தாப்பு வெடிகளும் கப்பல் வெடிகளும் நாட்டின் புதிய எழுச்சிக்கு உற்சாக மூட்டும் கர்ச்சனையாக அமையவேண்டும். அப்போது தான் நாம் செல்வமுஞ் சீரும் பெற்றுக் கலாசாரத்துறையிலும் வளர்ச்சி பெற முடியும்.

## இலங்கைத் தீபம்

சீமையில் நிற்கும் இலங்கைப் பிரதமர் சேனநாயகா, அங்கு லங்கா தீபத்தை ஏற்றி வைத்தார். இதென்ன தீபமென வாசகர்கள் நினைக்கக்கூடும். அது புதுவிதமான ஒரு தீபமன்று. சீனத்திலுள்ள சந்திரனுக்கும் திருநெல்வேலியிலுள்ள சந்திரனுக்கும் வித்தியாசமிருப்பதில்லை. அது போலவே தீபம் என்றால் அது தீபந்தான். லண்டனிலுள்ள இலங்கை மாணவர்களின் உல்லாசப் பொழுது போக்குச் சங்கம் ஒன்றை ஸ்ரீ சேனநாயகா திறந்து வைத்தார். அப்போதுதான் அவர் அங்கு குன்றென நிமிர்ந்து நின்ற குத்துவிளக்கையும் ஏற்றி வைத்தார். இவ்விழாவில் ஸ்ரீ கே. வைத்தியநாதனும் பங்குபற்றிப் பிரகாசித்தார்.

## பிரதமர் வெற்றி

இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஓர் இலங்கை மாணவர், ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் பிரதமர் தமது கட்சியுடன் சேர்த்துக்கொண்டதைப் பெரிதும் பாராட்டினார். அது ஸ்ரீ சேனநாயகா பெற்ற பெரிய வெற்றியெனவுங் குறிப்பிட்டார். பிரதமரோ அதையிட்டுப் பெருமை கொள்பவராயில்லை. இலங்கையில் அனைவரும் ஒற்றுமையுடன் உழைத்துவருகின்றார்கள் என்பதே அவருடைய பதிலாகவிருந்தது.

ஆனால் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் நல்ல வெற்றி பெற்றிருக்கின்றார். அவர் யூ என். பியுடன் சேர்ந்தபடியால் இன்று ஐரோப்பாவில் உல்லாசப் பிரயாணம் செய்துவருகின்றார். தோழர் கெனமன் கூறியதுபோல: 'யூ. என். பியுடன் சேர்ந்து பார்; உலகை ஒரு முறை சுற்றிப் பார்' என்பது மந்திரியார் பொன்னம்பலம் அவர்களின் விஷயத்திலும் உண்மையாகிவிட்டது!

## தலையும் வாலும்

சமீபத்தில் யாழ்ப்பாணத்திலே நீதிமந்திரிக்கு அளிக்கப்பெற்ற விருந்து வைபமொன்றில், பழுத்த தேசீய வாதிகளில் ஒருவரான நியாயவாதி, வெகு சுவையாகவும் பேசியிருக்கின்றார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலை யூ, என். பியுடன் சேர்ந்து கொண்டது; ஆனால் அதன் வால்மட்டும் யாழ்ப்பாணத்து நகரசபைத் தேர்தலில் ஆட்டம் போடுகின்றதென அவர் குறிப்பிட்டார். எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம். ஆகவே அத்தலையை யூ. என். பி. தலைகுனியச்செய்துவிட்டது. வாலை யார் கவனிக்கப் போகின்றார்கள்? நாயின்வாலை நிமிர்த்த முடியாதென்பது யாவருமறிந்த விஷயம். இந்த அழகில் வாலைப்பற்றிக் கவலைப்படவேண்டியதேயில்லை!

## நகரசபைத் தேர்தல்

யாழ்ப்பாணம் நகரசபைத் தேர்தலுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ¬ம் தனது அபேட்சகர்களை நியமித்துள்ளது. தமிழ்க் காங்கிரஸ¬க்கு ஐம்பத்தொரு ரூபாய் கொடுத்து எத்தனையோ பேர் நியமனம் பெற்றிருக்கின்றனர். இதிற் புதிய பேர்வழிகளுமுளர். வண்ணார்பண்ணைப் பகுதியிலும் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஒருவர் நியமனம் பெற்றுள்ளார். இவருடன் தமிழ்க் காங்கிரஸின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவர் போட்டியிடுவார் என ஒருவர் எழுதியிருக்கின்றார். ஒருவேளை தமிழ்க்காங்கிரஸ் தலைவரின் அரசியல் ஞானமானது கிளை ஸ்தாபனத் தலைவருக்கும் உதித்திருக்கலாம்!

## மாலைக்குத் தடை

மலர்மாலை சூட்டி மேளம் தட்டுவது இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது. எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகையால் இக் கௌரவத்துக்கு அனைவரும் உரிமை பூண்டவர்கள். ஆனால் மந்திரி பண்டாரநாயகா இந்த மாலை போடும் சம்பிரதாயத்தைத் தமது தொகுதியிலே தடை செய்திருக்கின்றார். அங்குள்ள எவராவது அவருக்கு மாலை சூட்டக்கூடாதென்பது மந்திரியின் கட்டளையாகும். அதே போன்று பந்தர்களும் நாட்டக்கூடாது. சமீபத்திற் கண்டிப் பகுதியிலுள்ள கிராமொன்றிற் பேசும்போது தான், மந்திரி பண்டாரநாயகா இவற்றையெல்லாம் கூறினார். இத்தனையும் வெறும் வாய்ப் பந்தரல்ல. ஏனெனில் அவர் அங்குள்ள அலங்காரமான பந்தரின் கீழ், மலர்மாலையுடன் நின்றுகொண்டே பேசியிருக்கின்றார்.

# நீர்வீழ்ச்சி மின்சாரம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாசம் காரணமாக, என்றும் ஒரே அளவான நீரைப் பெறுதல் முடியாது. மிகக் குறைந்த மழை வீழ்ச்சியின் அளவுக்கேற்றதான சக்தியுடைய யந்திரங்களை உபயோகிக்கலாம்; ஆனால், மழை வீழ்ச்சி கூடின காலங்களில் அதிகமான நீர் வீணே போய் விடும். இதைத் தடுப்பதற்காகவே, ஆற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டு ஒரு நீர்ச் சேமிப்பில் நீர் சேகரிக்கப்படுகிறது. இதனால் கூடின அளவுக்கு என்றும் நீரின் சக்தியைப் பெறமுடியும். இங்ஙனம் ஏற்படுத்தப்பட்ட மின்சாரம் தேவையான இடங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

சுரங்கத்துக்கும் நீர்க்குழாய்களுக்குமிடையில் நீர்ச்சேமிப் பறையை அமைப்பதின் அவசியத்தையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் அவசியம். மேலே காட்டியபடி, நோர்டன் அணையிலிருந்து அமைக்கப்படும் சுரங்கத்துக்கும், நீர்க்குழாய்களுக்கும் இடையில் ஒரு நீர்ச்சேமிப்பறை இருக்கின்றது. அச்சுரங்கத்தினூடாக 15000 தொன் நிறையான தண்ணீர் செல்கிறது. அத் தண்ணீரின் வேகம், மேலே கூறியவாறு ஏற்படுத்தப்பட்ட மின்னிலையத் தேவைக்குப் போதாது. அந்நீரைச் சேமித்து அனுப்புவதனால் மேற்படி தேவையைப் பூர்த்தியாக்க முடியும். இந்நோக்கத்தைக் கொண்டே அவ்விரு நதிகளுக்குமிடையில் ஒரு நீர்ச்சேமிப் பறை ஏற்படுத்தப்படுகின்றது.

1950-ம் ஆண்டளவில் இந்த முதலாம்படி முற்றுப் பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அது முற்றுப்பெறுவதன்முன்னே 2-ம் படி நிர்மாண வேலைகளுக்கான ஆரம்ப வேலை தொடங்கப்பட்டு விட்டது. இவ்வருட ஒக்டோபர் மாத முதல் தேதியில் இலங்கைப் பிரதமரும் சென்று மேலே விபரித்த ஏற்பாடுகளை பார்வை இட்டுள்ளார்.

### இதன் பயன்:

இலங்கை ஒரு கமத்தொழில நாடாக இருந்தபோதிலும், கைத்தொழிலை விருத்தியாக்குவது கஷ்டமான காரியமன்றென்பதை, மேற்படி திட்டம் நிரூபிக்கும். அநேகமான தேயிலைத் தொழிற்சாலைகளின உபயோகத்துக்கும், தென்னை, றப்பர், தொழிலாலைகளுக்கும் மின்சாரசக்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தினாலே மிகக்குறைந்த செலவுடன் மின்சாரசக்தியைப் பெறமுடியும். இன்னும் பசளை உற்பத்தி, வேறும் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தல் முதலியவற்றுக்கு இம்மின்சார சக்தி மிக உபயோகமானது. புகையிரதங்களையும் மின் சக்தியினால் ஓடச்செய்யலாம். புகையும் கரியும் நிறைந்த புகைவண்டிப் பிரயாணத்தை அப்போதாவது நிறுத்தமுடியும். இவைமட்டுமன்றி சாதாரண வீட்டுத் தேவைக்கும் இம்மின் சக்தியை உபயோகிக்கும் காலமொன்றை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கலாம்.

### நன்றே செய்க

மேற்படி நோட்டன் அணைத்திட்டத்துடன் அரசாங்கம் திருப்தியடைந்து விடவில்லை. கல்ஓயாத் திட்டம் முதலிய பலவகைத் திட்டங்களுக்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்கின்றது. நமது நாட்டின் வளர்ச்சிக்காக மேற்படி திட்டங்களைத் துரிதப்படுத்த இலங்கை அரசாங்கம் துரிதப்படுவது மிகவும் போற்றப்படக்கூடியதுதான். ஆனால் அவசரத்தில் பலவீனமாக எதையும் செய்துவிடக்கூடாது. அரசாங்கம் ஆய்ந்தோய்ந்து செய்ய வேண்டும்.

இந்த நிலையில் மேற்படி நோட்டன் அணையையும் ஏனையவற்றையும் போய்ப்பார்த்தல் அவசியம். மலைநாட்டுப் புகையிரத வீதியில் ஹற்றனுக்கு அப்பால் வட்டவளை புகைரத நிலையத்திலிறங்கி ஏறக்குறைய ஏழுமைல் சென்றால் நோட்டன் அணையை அடையலாம். அங்கே அதற்குரிய அதிகாரிகள் மூலமாக எல்லாவற்றையும் பார்த்து விளங்கிக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆதிபத்தியம் அடங்குதல்

## இந்தியாவுடன் நட்புரிமை

**பிரிட்டிஷ் ஏகாதிபத்திய** நாடுகளின் முதன் மந்திரிமாரின் மகாநாடு லண்டனில் நடைபெற்று முடிவுக்குவந்துளது. ஏகாதிபத்திய நாடுகட்கிடையில் ஐக்கியத்தையும் ஒத்துழைப்பினையும் நாட்டுவதே இம் மகாநாட்டின் பிரதம நோக்கம். இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றதும் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் தளர்ச்சியடைந்ததாகக் கருதப்பட்டது. நட்பு முறையில் மறுபடியும் ஒற்றுமையாக நின்று உழைக்கச் செய்வதற்கு வழிகள் ஆலோசிக்கப்பட்டன. இந்தியா குடியேற்றநாட்டு சுதந்திரத்துடன் திருப்தியடைய விரும்பவில்லை. பூரண சுதந்திரத்தையே நாடுவதாயிற்று. எனவே இந்தியாவினை எவ்விதத்திலும் இதற்குள் கொண்டுவருவதற்குப் பிரமாதமான முயற்சிகளும் யோசனைகளும் நிகழ்வதாயின. "பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள்" என்ற பிரயோகத்தை முற்றாக விட்டுச் 'சுதந்திரம் பெற்ற நாடுகள்' என்ற பெயருடன் புதிய ஸ்தாபனம் இயங்குமாம். இந்தியாவின் நட்பினையும் ஒத்துழைப்பினையும் எவ்விதத்திலும் பெற்றுவிட வேண்டுமென்று இம் மகாநாட்டுப் பிரதிநிதிகள் பிடிவாதமாக நின்றனர். இந்திய அரசினர் இவ்விஷயத்தில் என்ன தீர்மானத்துக்குவருவாரென்பதை அறிய யாவரும் ஆவலுடையர்.

### போலிச் சாட்டுகள்

**பாகிஸ்தான்** அரசினர் இந்திய அரசினர்மீது கொண்டுவந்த போலி முறைப்பாட்டினை ஐக்கிய நாடுகள் சங்கம் ஏற்கவில்லை. முஸ்லீம் சமுதாயத்தை வேரோடு தொலைக்க இந்திய அரசினர் முயன்றாரென்பதை உலகில் எவர்தான் நம்புவார்? இந்துக்கள்மீது அவசியமின்றி அபவாதங்களைச் சுமத்துவது பாகிஸ்தான் அரசினரின் சுபாவமாய் விட்டது. முஸ்லீம்கள் தாமே கொடுமைகளையும் அக்கிரமங்களையுஞ் செய்துகொண்டு, பிறர்மீது அக்குற்றத்தைச் சுமத்தப் பார்ப்பது மிக விரோதமாகின்றது. பாஞ்சாலத்தில் நடந்த பெருங் கலகத்தில் அநேகர் உயிர் மாண்டது உண்மையே. முஸ்லீம்கள் மாத்திரமல்ல இந்துக்களும் பெருந்தொகையாக உயிர் மாண்டனர். இக்கலகம் ஆரம்பிப்பதற்கு, முஸ்லீம் தலைவர்களின் யோசனையில்லாத கொள்கைகளே காரணமாயின. இந்தியா கூறுபோடப்படாவிடின் இவ்வித கலகங்கள் நிகழக் காரணமில்லையே. இவை யாவுக்கும் தாமே காரணராக விருந்துகொண்டு பாகிஸ்தான் அரசினர் இந்தியாமீது பழியைச் சுமத்த முயல்வது எவ்வளவு பிழையான விஷயம்?

### காங்கிரஸ் தலைவர்

அடுத்த டிஸம்பர் மாதம் ஜெயப்பூரில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்குத் தலைவராகப் பட்டாபி சீதாராமய்யா அவர்கள் 194 அதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டனர். இப் பதவிக்கு இவரே தெரியப்படுவாரெனப் பொதுவாக யாவரும் எதிர்பார்த்தனர். அவ்வாறே இப்போது நிகழ்வதாயிற்று. தேசமக்கள் அளிக்கக்கூடிய இப் பெரிய பதவிக்குப் பட்டாபி சீதாராமய்யா அவர்கள் மிகவும் ஏற்றவரென்பதை எவரும் மறுக்கமாட்டார். உயிரோடு வாழும் காங்கிரஸ் வாதிகளில் வயதில் முதிர்ந்தவராகும் இவர் இற்றைக்குப் பத்து வருடங்கட்கு முன் இப் பதவியைப் பெற்றிருக்க வேண்டும். தேசமக்கள் தமது நன்றியை உரிய முறையில் காட்டியது மெச்சப்படவேண்டிய விஷயம். இவர் அடைந்த வெற்றி ஆந்திர வாசிகட்கு அளவுகடந்த ஆனந்தத்தை அளித்துளது. இவர் தலைமையில் காங்கிரஸ் அதியுன்னத நிலையை அடையுமென்பாம்.

### காஷ்மீர் பிரச்சினை

காஷ்மீர் விசாரணைச் சபையினர் இன்னுந் தமது அறிக்கையை வெளியிடவில்லை. ஒன்றுக்கு மிணங்காத பாகிஸ்தான் அரசினரைத் திருப்தி செய்வது இயலாத விஷயமாகின்றது. யுத்தத்தைக் காஷ்மீரில் நிற்பாட்ட மேற்படி விசாரணைச் சபையினர் முன்னர் செய்த எத்தனம் பலிக்காது போயிற்று. இப்போது லண்டனில் பிரிட்டிஷ் முதன் மந்திரியாரும் சமாதானத்தை நாட்டச் சிறிது முயன்றனர். பண்டிதர் நேருவினையும், லியாகத் அலிகான் என்பவரையும் சந்திக்கப் பிடித்துச் சமரசத்தை ஒருபடி கொண்டுவரலாமென மேஜர் அட்லி கூடியளவு பாடுபட்டார். அதுவும் வீணாக முடிந்தது. காஷ்மீர் தேச மக்களின் சம்மதத்தைப் பெறும் விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுள்ளதாம். சன சம்மதம் எடுக்கும் விஷயத்தில் தாமும் நெருங்கிப் பங்குபற்ற வேண்டுமெனப் பாகிஸ்தான் அரசினர் பிடிவாதஞ் செய்கின்றனர். காஷ்மீர் அரசினரே சன சம்மதத்தை அறியும் உரிமையுடையரென்பது இந்திய அரசினர் கருத்து. வேண்டுமென்றால் பாகிஸ்தான் பிரதிநிதிகள் சன சம்மதம் பெறப்படுங்கால் நின்று அவதானிக்க இடங்கொடுக்கப்படுவர். ஆனால் பாகிஸ்தான் அரசினர் இவ்விஷயத்தில் பங்குபற்ற, இந்திய அரசினர் இணங்கமாட்டார்.

**- இந்தியா -**

### துவேஷத்தைக் கிளப்புதல்

அவசியமின்றிப் பாகிஸ்தான் அரசினர் இந்திய அரசினர்மீது பகை சாதித்து நாட்டு மக்களின் மனதில் துவேஷ முண்டாகச் செய்கின்றனர். ஹைதராபாத்தில் முஸ்லீம்கள் எல்லையின்றிக் கொல்லப்பட்டனர். முஸ்லீம்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றனர் என்ற முறையில் பாகிஸ்தான் பத்திரிகைகளும் முழங்குகின்றன. இவ்விதமான பொய்ப் பிரசாரங்களைக் கண்டித்து இந்திய அரசினர் பாகிஸ்தான் அரசினர்க்குப் பலமுறை எடுத்துக் காட்டியதுண்டு. அப்பத்திரிகைகள் மேன்மேலும் இவ்வித இழிந்த செயலைச் செய்துகொண்டே வருகின்றன. இப்பொழுது இந்திய அரசினர் பாகிஸ்தான் பத்திரிகைகள் இந்தியாவுக்குள் நுழையக்கூடாதெனக் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

### பிரான்சீய இந்திய நாடுகள்

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு விலகியதும், இனி பிரான்சியர் அடுத்தாப்போல செய்ய வேண்டியது என்ன என்று சொல்லவேண்டியதில்லை. பிரான்சியருக்கு இந்தியாவிற் சொந்தமான புதுச்சேரி, காரைக்கால், மாஹி, சந்திரநாகூர் என்ற இடங்களில் மிக்க பரபரப்பும் கலகங்களும் ஏற்பட்டுள்ளன. இவ்விடங்களில் வசிப்போர் இந்தியராகவே அவர்கள் இந்தியருடன் சேரவேண்டுமென்று பிடிவாதமாக நிற்கின்றனர். பிரான்சிய அரசினர் சன சம்மதப்படி செய்வதெனக் கூறுகின்றார். இந்திய அரசினரின் பிரதிநிதிகளும் சமுகமளித்துத்தான் சன சம்மதம் பெறவேண்டுமென்பது பெரும்பான்மையோர் விருப்பம். இதற்குப் பிரான்சிய அரசினர் விரும்புகின்றாரில்லை.

## மற்றோர் யுத்தம் நிகழுமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி எழுகின்றது. அமெரிகாவும் அதனுடைய நேச தேசங்களும் ஒன்று கூடினால், ருஷியாவும் அதனுடைய நேச தேசங்களும் ஒன்று கூடும். அப்படியானால் அமெரிக்காவே சக்திவாய்ந்ததாக விருக்கும். சீனத்து வானொலியிலுள்ள கொம்யூனிஸ்ட் ஒருவர் ஓர் அரசியற்சுலோகத்துடன் ஆறு ஆகாயப்படைக் கப்பல்களைத் தரைமட்டமாக்கிவிடலாமென எண்ணலாம்.

அமெரிக்கா, ருஷியாவின் பலத்தை மதிப்பிடும்போதும், 'அப்படியிருக்கலாம்; இப்படியிருக்கலாம்' என்றே கருதுகின்றது. அமெரிக்கர் ஸ்டாலினுக்கு உண்மையைத்தான் சொல்லுகின்றார்களா? (அதுவுமில்லை)

அமெரிக்கா தன்னிலும் பார்க்க மிக்க பலமுள்ளதென ருஷியா எண்ணுமாயின் யுத்தம் உடனே நடைபெறுமென அதிகமாக எதிர்பார்க்க முடியாது.

இங்கு கூறப்பட்ட ஆதாரங்களையும், அனுமானங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயுமிடத்துப் பின்வரும் பரீட்சார்த்தமான முடிபுகளைக் கொள்ளலாம்.

1. அமெரிக்கா [illegible] யுத்தத்தை விரும்பவில்லை.
   (இடமானது)
2. அமெரிக்கா ருஷியாவுக்கு எதிராக பெர்லினிலும் சண்டை செய்யும்.
   (அநேகமாகச்சம்பவிக்கக் கூடும்)
3. ருஷியாபெறும் அரசியல் வெற்றிகளுக்கு எதிராக, அமெரிக்கா தனது இராணுவ பலத்தை வெகு ஆறுதலாகவே கையாளும்.
   (அநேகமாகச் சம்பவிக்கக் கூடும்)
4. சோவியத்ருஷியா தற்போது யுத்தத்தைவிரும்பவில்லை)
   (சம்பவிக்கக்கூடும்)
5. கொம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கு ஆதரவில்லாத சுலபமான இடங்களில் ருஷியா தனது பலத்தைக் காட்டும்.
   (அநேகமாகச் சம்பவிக்கக் கூடும்)
6. மேற்றிசைநாடுகளின் பலம் அதிகமாகும் போது யுத்த ஆபத்துக் குறைகின்றது; பலம் குறையும்போது ஆபத்து அதிகரிக்கின்றது.
   (சம்பவிக்கக்கூடும்)
7. இவ்வாண்டு யுத்தம் ஏற்படுவது உண்மையாகவே ஒருவேளை சம்பவிக்கலாம். ஆனால் இது சம்பவிக்கக்கூடியதல்ல.
8. சமாதானத்துக்குப்பங்கம்தொடர்ந்து ஏற்படுவது நிச்சயம்.

### அறிவித்தல்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு அடுத்தவார ஈழகேசரி இதழ் (7.11.48) [illegible]

[illegible]திபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் இத்தகைய தீபாவளிகளைக் காண்பதில்லை......"

## தலைத் தீபாவளி

**தமிழ்நாட்டிலிருந்து வெளி**வரும் தீபாவளி மலர்களை வருடந்தோறும் பார்க்கிறோம். ஏதோ இரண்டொருவிஷயங்களைத்தவிர மற்றெல்லா விஷயங்களும்; கணவன் தன் புது மனைவியின் வீட்டுக்குப் போவது—தாயாரின் பிடிவாதத்தால், சீர்செய்யவில்லை என்ற காரணத்தால், போகாமல் விடுவது — பட்டாசு சுடுவது — தீபாவளிக்குப் போகாமையால் வெறுப்பு ஏற்படுவது – ஒருவிதத்தில்—அல்லது நல்ல முறையாக —வேட்டகத்தில் தலைத்தீபாவளிக் கொண்டாட்டம் கொண்டாடுவது — தலைதீபாவளிக்குக் கணவன் வாராமையால் மனைவி துக்கப்படுவது என்றிவ்வாறான கதைகளே அப்பத்திரிகைகளில் —அநேகமாக எல்லாப் பத்திரிகைகளிலும்—முக்காலே மூன்று வீசம் காணப்படும்.

யாழ்ப்பாணத்திலுள்ள நம் போன்றவர்கள் இத்தகைய தீபாவளிகளைப் பெரும்பாலும் காண்பதில்லை. தென்னாட்டுத் தீபாவளியும் யாழ்ப்பாணத்துத் தீபாவளியும் இவ்விதத்தில் ஒற்றுமையுடையனவன்று. இங்கு பெரும்பாலும் தீபாவளி சகலருக்கும் ஒரேவிதமானதே. அங்ஙனமிருக்க யாழ்ப்பாணத்தில் 'தலைத் தீபாவளி' என்ற தலையங்கத்தைக் கண்டு, ஏதோ தென்னாட்டுத் தீபாவளிக் கதை என்று வாசகர்கள் எண்ணினாலும் எண்ணலாம்.

வேட்டகத்துக்குக் கணவன் தன் புது மனைவியைக் காண முதன்முதற் செல்லும் தீபாவளி என்னும் பொருளில் தென்னாட்டில் தலைத் தீபாவளி என்று வழங்கிவருகிறார்கள் என்று எண்ணுகிறேன்.

தீபாவளி, புராணக் கதைப்படி 'அடிமை அகன்ற நாள்' என்ற பொருளில், அல்லது 'ஞானம் பெற்ற நாள்' என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகிறது. அடிமை அகன்ற நாளும் ஞானம் பெற்ற நாளும் என்றும் பொருள்படும். ஆயின் இன்று நாம் கொள்ளும் பொருள் கோடி உடுத்தல் முதலியன, 'தீபாவளி வருகிறதே என்ன விதமான சேலை எடுத்தாய்', 'எனக்குப் பட்டுக்கரை வேட்டி வேண்டும் அப்பா' என்று பெண்களும் குழந்தைகளும் பேசிக்கொள்வதைக் கேட்கிறோம்.

தீபாவளி ஏற்பட்ட வரலாற்றை—புராணத்தை—ப்பார்ப்போம். பெரிய வரங்கள் பெற்ற நரகாசுரன் கொடுமையிருந்தவன். நன்முறைப்படி வாழ்வது எப்படி என்ற ஞானம் பெறாதவன். ஹிம்சை மூலம் தேவர்களையும் மனிதர்களையும் கொடுமை செய்தான். தேவர்களும் மனிதர்களும் அடக்குமுறைக்குப் பலியானார்கள். அவனது கொடுங்கோலாட்சி நடைபெற்றது. கொடுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? அவன் கொல்லப்பட்டான். அவன் கொல்லப்பட்டது யாராலாவது இருக்கட்டும். சிவபிரானும் விஷ்ணு மூர்த்தியும் ஏகரூபியாய்க் கொன்றனர் என்றும் விஷ்ணுவும் பிரமாவும் கொன்றனர் என்றும் கதைகள் கூறுகின்றன. அவனது இறப்பால் விடுதலை, மகிழ்ச்சி என்பன தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உண்டாயின. அசுரனுக்கு ஞானம் உண்டாயிற்று. அடக்குமுறை மிருகத்தனமானது — பயனற்றது— ஈற்றில் தோல்வியுறுவது என்ற ஞானம் பெற்றான். ஆகவே தீபாவளியின் பெறுபேறாய் தேவர்களும் மனிதர்களும் விடுதலை அடைந்தனர்; அதனால் மகிழ்ச்சி பெற்றனர். அரக்கன் ஞானம் பெற்றான்.

இன்று நமக்கு ஏற்பட்டதென்ன? கீழைத்தேசங்களில் ஏற்பட்ட மாறுதல்களெவை? என ஒருமுறை நாம் சிந்தித்துப்பார்த்தால் தீபாவளியின் ஞாபகம் வருகிறது. அதுவும் நமது இலங்கைக்கு இந்தத் தீபாவளி தலைத் தீபாவளி என்ற எண்ணம் உண்டாகும்.

கீழைத்தேச நாடுகள், அன்னிய அரசு என்னும் நரகாசுரனால் அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வந்தன. துன்பத்தில் உழன்றோம். அடக்கி, நசுக்கி ஆழ்வது நமது கடன்—அடங்கி நசுங்கி

**'ராஜா'**

வாழ்வது கீழைத்தேச மக்கள் கடன் என்று அவர்கள் எண்ணினார்கள். எவராலானாலும் சரி, கீழைத்தேச மக்கள் விடுதலை பெற்றனர்; மகிழ்ச்சிகொண்டனர். ஆள்வது நமதுகடன்; ஆளப்படுவது அவர்கள் கடன் என்ற பொய் எண்ணம் மறந்து 'எல்லோரும்சமம்' என்றஎண்ணம்—ஞானம்—மேலைத்தேசமக்களிடம் உண்டாயது. எனவே அடிமைகள் விடுதலையும் மகிழ்ச்சியும் பெற்றார்கள். அசுரன் ஞானம் பெற்றான். இதுவே தீபாவளித் திருநாளின் உட்கோள்.

* * *

எனவே இதனைக் கொண்டாட வேண்டுவது நமது கடன். அதுவும் இலங்கைமக்கள் சுதந்தரமடைந்தபின் வரும் முதலாவது தீபாவளி தலைத்தீபாவளி இது வன்றோ! அதனால இதனை நன்கு கொண்டாடுவோம். ஆனால், ஒரு பகுதித் தமிழ்மக்கள் இன்னும் அடிமையாகவே இருக்கிறார்கள். ஏன்? அவர்களை யாரும் அடிமைப்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் தாமும் அடிமையானார்கள். அந்த அடிமைத்தனத்தில் அவர்கள மகிழ்ச்சிகொள்ளுகிறார்கள். அவர்கள்— அடிமைப்பட்ட மக்கள். ஞானம் பெற்றுவிட்டால் அவர்கள் அடிமை தீரும். அவர்கள் ஞானம் மது அரக்கனிடமிருந்து அவர்களை மீட்கும். எந்த அரக்கனிடமிருந்து தாங்கள் நீங்க வேண்டுமோ அந்த அரக்கனைத் தம்மை அடிமை கொள்ளுமாறு செல்வர்களும் வறியவர்களும் அடிமை நீங்கிய திருநாளன்று— தீபாவளியன்று அதி காலையிலேயே வேண்டுகிறார்கள்.

அழித்தல் தொழிலையும் மேற்கொண்டு ஆடு கோழிகளின் புலாலையும் விடுகின்றாரில்லை. ஆடு கோழிகள்தான் அவர்களுக்கு நரகாசுரன்கள்போலும்.

தீபாவளி ஐப்பசி மாத அமர பட்சத்துச் சதுர்த்தசியில் சூரிய உதயமாகுமுன் வரும் ஒரு சிவராத்திரி விரதமேயாகும். இந்தக் காலத்தில் நீர் நிலைகள் யாவும் புனித கங்கை போன்றன. நல்லெண்ணெய் இலட்சுமியாகும். வெந்நீர் பிதிர்கள் முத்திபெறும் தீர்த்தமாகும்.

நரக சதுர்த்தசியாகிய இன்று நரகாசுரன் வேண்டுகோட்படி எண்ணெய் தேய்த்து முழுகிக் கோடி வஸ்திரம் தரித்துச் சிவ தரிசனம் விஷ்ணு தரிசனம் செய்து புண்ணியம் பெறுதற்குப் பதில் தீய காரியங்களைச் செய்து பாவத்தைச் சம்பாதியாதிருப்பது மேல்.

## தேர்தல் அப்பீல்
### ஸ்ரீ தம்பிஐயா வெற்றி

ஊர்காவற்றுறைப் பிரதிநிதியான ஸ்ரீ ஏ. எல். தம்பிஐயா அவர்களின் தேர்தலை ஆட்சேபித்து நியாயவாதி ஸ்ரீ ஏ. வி. குலசிங்கம் தொடர்ந்த வழக்கின் பேறாக, ஸ்ரீ தம்பிஐயா தமது பதவியை இழந்தார். அப்பீல் செய்துகொள்வதற்கு உரிமை பெற்ற ஸ்ரீ தம்பிஐயாவின் அப்பீல் மூன்று நீதியரசர்களால் விசாரணை செய்யப்பட்டது. ஸ்ரீ தம்பிஐயா இதில் வெற்றிபெற்றுள்ளார்.

# யூ. என். பி. கட்சியின் சக்தி

## யாழ்ப்பாணத்தில் நீதி மந்திரி

"சிங்களர் எமது சிறந்த நண்பர்கள் என யான் என்றுமே யாழ்ப்பாணத்தவர்களுக்குக் கூறிவருகின்றேன். பழைய சட்டநிருபண சபையிலும் சிங்களர் யாழ்ப்பாணத்துப் பிரதிநிதிகளுக்கு ஆதரவாக நின்று எங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைத்துவந்தனர்" என நியாயவாதி சு. இராசரத்தினம் அவர்கள் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் நீதி மந்திரி டொக்டர் இராஜபக்ஸ அவர்களுக்கு அளித்த தேநீர் விருந்தின்போது குறிப்பிட்டார்.

இவ்விருந்து வைபவம் சென்ற வெள்ளிக்கிழமை (22-10-48) பிற்பகல் நடைபெற்றது. ஸ்ரீ இராசரத்தினமும் அவர் தம் பாரியாரினதும் அழைப்பை யேற்றுப் பல பிரமுகர்களும் அன்பர்களும் இதிற்கலந்துகொண்டனர்.

சைவாசிரிய கலாசாலை அதிபர் ஸ்ரீ. எஸ். சுவாமிநாதன் நீதி மந்திரிக்கு மாலை சூட்டினார். செல்வி திலகவதி இராஜரத்தினம் ஸ்ரீமதி இராஜபக்ஸ அவர்களுக்குச் செண்டு வழங்கினர். இவ்விருந்து வைபவத்தை இன்னிசையும் பரிமளிக்கச் செய்தது.

ஸ்ரீ இராசரத்தினம் தொடர்ந்து பேசியதாவது: "அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சிலகாலமாகத் திக்குத் தெரியாத காட்டிலேநின்று தத்தளித்தது. அரசாங்கக்கட்சியுடன் சேர்ந்து உழைத்தாலன்றி உய்யமுடியாதென்பதை இது இன்று அறிந்து கொண்டபடியால் யூ. என். பியுடன் சேர்ந்துகொண்டது. இது மகிழ்ச்சிக்குரியதாகும். அப்படியிருந்தும் தமிழ்க்காங்கிரஸின் ஆரவாரம் இன்னும் நின்றபாடில்லை. தலையாடுகள் யாவும் யூ. என். பியுடன் சேர்ந்துகொண்டன. ஆனால் யாழ்ப்பாண நகரசபைத் தேர்தலை முன்னிட்டு தமிழ்க் காங்கிரஸ் வாலுகள் ஆட்டம் போடத் தொடங்கிவிட்டன."

நீதி மந்திரி அவர்கள் பேசியதாவது: "யாழ்ப்பாணத்தவர்கள் யூ. என். பியுடன் சேர்ந்து உழைக்க முற்பட்டமை புத்திசாதுரியமான ஒரு செயலாகும். யாழ்ப்பாணத்தில் யூ. என். பி கட்சியில் அதிக தொகையினர் சேராதவிடத்தும் அதிற் சேர்ந்தவர்கள் அத்தனைபேரும் அரசியற் சூறுவளியை எதிர்த்து வெற்றிநாட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்தவர்கள் வேலிகளுக்குப்பின்னால் மறைந்து நிற்காது, வெளியேவந்து நாட்டின் நன்மைக்காக உழைப்பது அவசியமாகும். யாழ்ப்பாணத்துப் பெண்மணிகள் சமூக சேவையில் ஈடுபட்டு உழைப்பார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்."

பின்னர் ஸ்ரீ. ஏ. ஈ. தம்பர் பேசியதாவது: "இங்குஇன்று கூடியிருக்கும் அத்தனைபேரும் கடந்த25 வருடகாலமாக நாட்டிலே தேசிய ஒளியைப் பாதுகாத்துவருகின்றனர். ஒற்றுமை பூண்ட சுதந்திர இலங்கையின் எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டு நாம் உழைத்துள்ளோம். தேசிய மறுமலர்ச்சிக்கு இந்த ஒற்றுமை அத்தியாவசியமாகும்."

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் – மல்லாகம் பிரசித்த நொத்தாரிசும் பிறக்கிராசியுமாகும் திரு. எம். எஸ். சுப்பிரமணியம் அவர்களால் 19-9-36-லும், 9-5-38-லும் முறையே 848-ம், 1365-ம் இலக்கங்களில் எழுதப்பட்ட அறுதி உறுதிகளின்படி என்னாற் கொள்விலை செய்யப்பெற்ற யாழ்ப்பாணப் பகுதி, வலிகாமம் வடக்கு இறை, மல்லாகம் கோவிற்பற்று, மல்லாகத்திலுள்ள 'பறட்டை சிட்டி' என்னும் பெயருள்ள 'பலட்டைசிட்டியும் கட்டுத்தறையும்' என்னுங் காணியை யாரிடமிருந்தாவது அறுதிகொள்ளக்கூடாதென இத்தாற் பொதுசனங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன்.

இங்ஙனம்
முத்தையா நாகரத்தினம்
குலால பீலா,
6-10-48. [3539-ii]


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 நபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 நபாவுக்குக் கூடியும் 10,000 நபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 நபாவுக்குக் கூடியும் 50,000 நபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 நபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[3515]


### யா. ஆ. தி. பா. வி. சங்கப் பாடவிதானம் 1949, 50

(27-8-48-ல் பாடவிதானச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது)

பரீட்சைப் பாடவிதானம்...சமஸ்கிருதம்

#### பிரவேச பரீட்சை

பாடவகை I

காவியம் அமிசம் 300

I. ரகுவம்சம்—முதல் 2 சர்க்கம்.
II. அபிநவபாடாவலி. முதற் புத்தகம் Macmillan & Co., Madras.)
III. ஹிதோபதேசம் - மித்திரலாபம்

பாடவகை II

வியாகரணம் அமிசம் 200

I. மார்கோபதேசிகை K. L. V. Sastri
II. லகுகௌமுதி — (சந்தி முடிய)
III. சந்திராலோகம். (முதல் 30. அலங்காரம்)

பாடவகை III

அமிசம் 100

1. சொல்வதெழுதுதல்
2. மொழிபெயர்த்தல்

பாடவகை IV

பிரிவு ஒன்றுக்கு அமிசம் 50

1. சியாமளாதண்டகம்
2. நீதிசாஸ்திரம் முதல் 100 சுலோகம்
3. சிவாநந்தலஹரீ — முதல் 50, சுலோகம்.
4. முகுந்த மாலை (all from K. L. V. Sastri)

#### பாலபண்டிதர்

பாடவகை I

காவியம் அமிசம் 300

1. குமாரசம்பவம் முதல் 2 சர்க்கம்
2. சம்பூராமாயணம் முதல் 2 காண்டம்
3. பார்வதீபரிணயம்
4. சந்திராபீடசரிதம்.

பாடவகை II

வியாகரணம் அமிசம் 200

1. லகுகௌமுதி (தசவிகரணி முடிய)
2. காவியாதர்சம். 1-ம் அத்தியாயம்.

பாடவகை III

அமிசம் 100

மொழி பெயர்த்தல், வியாசமெழுதுதல்

பாடவகை IV

பிரிவு அமிசம் 50.

1. தேவீஸ்தோத்திரமஞ்சரி
2. திலீபசரிதம்
3. பர்த்ருஹரிநீதிசதகம் முதல் 50 சுலோகம்.
4. கீத்த கோவிந்தம்

#### பண்டிதர்

பாடவகை

காவியம் அமிசம் 300

1. நைஷதம் 5-ம் 6-ம் சர்க்கம்.
2. சாகுந்தலம்
3. சிசுபாலவதம் 3-ம் 4-ம் சர்க்கம்
4. தசகுமாரசரிதம். பூர்வ பீடிகை
5. பாரதசம்பூ. முதல் இரண்டு ஸ்தபகம்.

பாடவகை II

வியாகரணம் அமிசம் 200

1. சித்தாந்த கௌமுதி— பூர்வார்த்தம்.
2. காவியாதர்சம் 2-ம் 3-ம் அத்தியாயம்.
3. விருத்தரத் நாகரம் முதல் மூன்று அத்தியாயம்.

பாடவகை III

அம்சம் 100

மொழிபெயர்த்தல் வியாசமெழுதுதல்.

பாடவகை IV

பிரிவு ஒன்றுக்கு அமிசம் 50

1. லௌகிக நியாயசஞ்சரி.
2. தர்க்கசங்கிரகம். (நியாய போதினி)
3. சைவசித்தாந்த பரிபாஷை
4. [illegible] புத்தகம்
5. சிவலீலார்ணவம் முதல் சர்க்கம்.

# கொம்பு முறிப்பு விழா

## சித்தாண்டியிற் போட்டி

மட்டக்களப்பைச் சேர்ந்த சித்தாண்டியில் ஒரு மாதகாலந் தொடக்கமாக அப் பகுதி மக்களால் ஷ்டி விழா ஆரம்பித்துக் கொண்டாடப்பட்டது. வடசேரி, தென்சேரிக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட போட்டியின் முடிவு வடசேரிக் கட்சி ஈட்டிய வெற்றி வைபவத்துடன் முற்றுப் பெற்றது.

இவ் விழாவானது தொன்றுதொட்டு பண்டைத் தமிழ்மக்களாற் சக்தி வழிபாட்டை முக்கிய நோக்கமாகக்கொண்டு கொண்டாடப்படுவது.

இவ் விழாவில் ஷ்டி இரு கட்சியினரிடையும் நடைபெறும் போர்த்தேங்காய் அடித்தல், கொம்பு அளவெடுத்தல், கேடகம் (ஏடகம்) கட்டுதல், வாரம் பிரிதல், கொம்பு வரிதல், கொம்பு பவனி வருதல், கொம்பு பூட்டுதல், கொம்பு முறித்தல் ஆகிய நிகழ்ச்சிநிரல்கள் முக்கிய அம்சங்களாய் அமையும்.

முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் இரு கட்சியினராலும் வசந்தன், கூத்து, நடனம், கோலாட்டம் ஆகிய வேடிக்கைகள் நடாத்தப்பெறும்.

கொம்பு முறித்து முடிந்த பின்பு இரு கட்சியினரும் சேர்ந்து பராசத்திக்குப் பால் பொங்கி வீடுகள்தோறும் சென்று குளிர்ச்சி பாடுவர்.

சனசமூகக் கூட்டுறவுக்குத் தருணமளிக்கும் இவ் விழாவானது இக் கிராமத்திற் திரும்பவும் பத்து வருடங்களின் பின்புதான் நடைபெறுமுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சைவமகாநாடு

## சைவ சித்தாந்த சமாஜம்

சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தாருடைய 43-வது வருட விழாவும், சைவமகாநாடும் சர்வதாரி வருஷம் மார்கழி மாதம் கஎ, கஅ, கக (27, 28, 29-12-48)ம் நாட்களில் யாழப்பாணத்தில் நடைபெறும். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருடைய கேள்விக்கிணங்கி இம் மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது. சைவர் மகாநாடெனவும், சைவ மங்கையர் மகாநாடெனவும், சைவ இளைஞர் மகாநாடெனவும் ஷ்டி மகாநாடு மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

சைவர் மகாநாட்டுத் தலைவராகச் சைவசித்தாந்த சமாஜத்தின் நீண்டகாலக் காரியதரிசியாயிருந்து தொண்டாற்றிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்களும், சைவ மங்கையர் மகாநாட்டுக்குத் தூத்துக்குடி பாகம்பிரியாள் மாதர் கழகத் தலைவர் ஸ்ரீமதி ச. சிவகாமியம்மாள் அவர்களும், சைவர் இளைஞர் மகாநாட்டுத் தலைவராக பண்டிதர் வித்தவான் திரு. கா. பொ. இரத்தினம் B. A., (Hons) B. O. L., அவர்களும் தெரிவு செய்யப் பெற்றிருக்கின்றார்கள். இம் மூன்று மகாநாடுகளுக்கும் வரவேற்புத் தலைவர்களாக முறையே திரு. இ. சிவகுருநாதர் அவர்களும், ஸ்ரீமதி தி. சிவநாயகி அவர்களும், திரு. மூ. ஞானப்பிரகாசம் B. A., B. Sc. அவர்களும் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றனர். சைவ மகாநாட்டுப் பேச்சாளர்களாக இந்தியாவிலிருந்து சேலம் ஸ்ரீமதி அ. கு. காமாட்சியம்மையார் M. A. அவர்களும், சாத்தூர் உயர்தர வழக்கறிஞர் T. S. கந்தசுவாமி முதலியார் M. A., அவர்களும், சென்னை திரு. R. P. சேதுப்பிள்ளை B. A., அவர்களும், கோவைக்கிழார் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் B. A., B. L., அவர்களும் அழைக்கப்பெறுகின்றனர்.

குறித்த மகாநாட்டைச் சிறப்புறநடாத்துவதற்கு ரூபா 3000 வரை தேவையாக விருக்கின்றது. சைவாபிமானிகள் இச் சிறந்த கைங்கரியத்துக்குத் தங்களாலியன்ற பணவுதவியைப் புரிந்து சைவ மகாநாட்டைச் சிறப்பிக்குமாறு மேற்படி மகாநாட்டின் வரவேற்புச் சபையினர் வேண்டுகின்றனர்.

# ரோடியர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சிரட்டையைத் தளைத்துக் கட்டிவிடுவர்..........

மத்திம வளர்ச்சியும் அழகிய உறுப்புக்களுமுடையர். மனவலியும் மெய்வலியும் மிக்குடையர். அரிவையர் மிகுந்த அழகுவாய்ந்தவர். உயர்குலத்து இளங்காளையர் சிலர் தம் சுற்றத்தாரையும் துறந்து இவர்களுடன் குப்பாயத்தில் வாழ்கின்றனர்....

இவர்களுட்பலர் இப்பொழுது பௌத்த மதத்தைத் தழுவியுள்ளார். எனினும் சிறுதேவதை வழிபாடு செய்யும் வழக்கத்தையும் கைவிட்டிலர்.........

குறிப்பு: இவ்விபரங்கள் அனைத்தும் ஈழகேசரி ஆண்டுமடலில் முதலியார் குல. சபாநாதன் அவர்கள் எழுதிய ரோடியர் என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டன. —ப-ர்.


### கோட்டு விற்பனவு விளம்பரம் இல. 4468

மயிலிட்டி
1. யேக்கப் ஞேமன்
2. பெண் மாக்கிறேற்நல்லம்மா
வழக்காளிகள்

எதிராக

காங்கேசந்துறை தையிட்டி
1. கதிர்காமர் காசிப்பிள்ளை
2. பெண் சிதேவன் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4468-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1948-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 20-ந் திகதி (20-11-48) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 1930/ம், இதில் ரூபாய் 1500/க்கு 12-5-48-ந் திகதி தொடக்கம் 16-6-48-ந் திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 184-85 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று தையிட்டியிலை "கள்ளிகலட்டி" விலைப்பரப்பு பதினைந்து (15-ம்) கிணறும் வீடும் பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு, கந்தவனம் தம்பையாவின் ஆதனம். தெற்கு, விசுவர் அப்பாப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் அரைவாசி. (½)

முற்பதிவு H 215/156.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை 13-10-1948
[3540]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். நீங்கள் எல்லோரும் பட்டுப் பருத்தி அணிந்து ஆடிப்பாடிக்கொண்டாடிக் கொண்டிருக்கும் இப் புண்ணிய தினத்தில் நானும் ஏதோ எழுத நேர்ந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் காரியாலத்திற்கு அக்கம் பக்கத்திலுள்ள மருமக்கள் கட்டுக் கட்டாகச் சீனவெடிகளைக் கொளுத்தி வீசிக் கொண்டிருக்கிறார்கள். சத்தம் டப் டப் பென்று காதைத் துளைக்கின்றது. அதுதான் போகட்டும், அதிக பணம் வீணாகப் போகின்றதே என்று தான் துக்கப்படுகிறேன். கொண்டாடவேண்டியது அவசியம் தான். ஆனால் அதற்கும் அளவு பிரமாணம் இருக்கவேண்டும். பட்டாசு அதிகம் கொளுத்தும் காசைச் சேர்த்து ஒரு பருத்திப் புடவை தானும் வாங்கினீர்களானால் அது உங்களுக்கு உபயோகப்படுமல்லவா.

உங்களுக்கு வேண்டியனவற்றையெல்லாம் உங்கள் பெற்றோர் வேண்டித் தருவார்கள். சில மருமக்கள் பெற்றோரை அது வாங்கித்தாருங்கள் இது வாங்கித்தாருங்கள் என்று தொந்தரவு செய்வதாக என் காதுகளுக்கு எட்டுகிறது. உங்கள் தேவை என்னவென்பது அவர்களுக்குத் தெரியும். அவரவர் வசதிக்கேற்ப நிச்சயம் வாங்கியும் தருவார்கள். உங்கள் சந்தோஷத்திற்தானே அவர்களும் சந்தோஷமடைகிறார்கள். ஆகவே தொந்தரவுமட்டுஞ் செய்யாதீர்கள். உங்கள் அம்மா செய்த தீபாவளிப் பட்சணம் ஆறி அலர்ந்து போகும். முதல் அதைச் சாப்பிடுங்கள். உங்களுடைய சகோதரர்களோடு பகிர்ந்து சாப்பிடுங்கள். மிகுதியிருந்தால் எனக்கும் அனுப்புங்கள்.

உங்களுடைய சந்தோஷகரமான நேரத்தில் நான் அதிகம் எழுத விரும்பவில்லை.

வணக்கம்.

கேசரிமாமா

## தெரிந்ததா?

கீழ்க்காணும் கேள்விகளுக்கு மூன்று விடைகள் கொடுத்திருக்கிறேன். அவற்றுள் ஒன்றுதான் சரி. சரியான விடையுடன் உங்கள் விடைகளையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

1. சூரியன் எத்தனை நாட்களுக்கொருமுறை தன்னைத் தானே சுற்றிவருகின்றது?
   - i. 23
   - ii. 25
   - iii. 27
2. இரகுவமிசம் என்னும் நூல் செய்த புலவரின் பெயர் யாது?
   - i. அரசகேசரி
   - ii. புகழேந்தி
   - iii, ஒட்டக்கூத்தர்
3. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழித்தவர் யார்?
   - i. பெஞ்சமின் பிராங்க்லின்
   - ii. ஆபிரகாம் லிங்கன்
   - iii. ஜோர்ஜ் வாஷிங்டன்
4. புத்தகயாஎங்கிருக்கிறது?
   - i. மத்திய இந்தியாவில்
   - ii. வட இந்தியாவில்
   - iii. தென்னிந்தியாவில்
5. இலங்கையில் பயிர்ச் செய்கையைவளர்க்கஅதிகம் பாடுபட்ட அரசன் பெயர் யாது?
   - i. எல்லாளன்
   - ii. மகாசேனன்
   - iii. பராக்கிரமவாகு

[விடையை 12-ம் பக்கத்திற் பார்க்கவும்.]

## தீபாவளி வாழ்த்து

**சசி. பரஞ்சோதி—மே.155**

பாரார் போற்றும் பாகமாம் வடஈழந் தன்னிலே என்றும்
பரந்த நோக்கமும் பாவலர் செய்யுளும் தாங்கி என்றும்
ஊரா ரெல்லா மொருங்கே குழுமி யிருக்குமிடந் தன்னில்
நேராகச் சென்று நேர்மை யுடன் நிற்கும் கேசரி வாழியவே

# இன்று நாம் பாலர்கள் - நாளை?

**வேத. தணிகாசலம் — மே.9**

பிறந்தோம் மண்மேல். அன்னையின் அரவணைப்பில் மகிழ்ந்தோம். அமுதப்பாலை அருந்தினோம். வீட்டைப் பார்த்து, இதுதான் உலகம் என நினைத்தோம். குறுகுறு வென்று தவழ்ந்து பழகினோம். நாலுகாலால் நடந்தது போதுமென்றெண்ணி, இருகாலாலே விழுந்தும் எழுந்தும் நடந்தோம். சிறகைகளை நீட்டப் பழகினோம். குறும்புகளையும் மெல்ல மெல்ல 'அம்மாமாருக்கும் ஐயாமாருக்கும், செய்ய முற்பட்டோம். சோச்சி 'பாச்சி' என்று சிறுகச் சிறுகப் பேசவும் பழகினோம். இன்னும் எத்தனை விசித்திரங்களைக் கண்டோம் சுமார் 5 வயது வரையும்.

பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தோம். அன்றிருந்து தான் நாம் கல்வி படிக்கின்றோம். 'புத்தகங்களுடன் சிணுங்கிச் சிணுங்கிச் சென்றோமே அந்த நாளே தான். அப்பருவத்தைச் சிறிது நடந்து புத்தக உலகிலே—மலரிலே சுவைநாடும் தேனீக்களைப்போன்று—சஞ்சரிக்கின்றோம் இன்று. கல்வியைக் கசடறக் கற்கும் காலம் இது.

தேசிய கவி பாரதியார் மொழிந்ததுபோலச் சின்னஞ் சிறு குருவிகள் மாதிரி உண்பதும், உறங்குவதும் அலைவதுமாய் இருந்த பேதைப் பருவம் நம்மை யறியாமலே விடைபெற்று விட்டது. சில சமயம் பொழுதுபோனதே தெரியவில்லையென்பார் சிலர். அது மாதிரியே தான். மழலையில் மனதை மறந்து, கனவுகள் கண்டுகொண்டிருந்தோம். குழலும் யாழும்மழலை முன் குழைந்த குதலைப்பருவம் நம்மிடமிருந்து பிரியா விடை பெற்றது! ஏமாந்தோம் மழலையில். இனி அறிவுக் கடலுக்குள் நாம் செல்ல வேண்டும்.

நமக்குள்ளே 'நாம் யாவரும் கடவுளின் பிள்ளைகள்; படைப்பில் வித்தியாசமில்லை. யாவரும் ஓர் குலம்' என்ற சமரச மனப்பான்மை வேரூன்ற வேண்டும். "யாதுமூரே யாவருங் கேளிர் (கேளிர்—இனத்தவர்) என்ற பழமூதூர்களின் பண்பாடமைந்த பண்புகள் நம்மிடையே பதிய வேண்டும். மனிதனை மிருகமாக மதித்து மடைத்தனம் புரியும் மதியீனங்கள் நம்மை விட்டு விலக வேண்டும். 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்ற உயரிய எண்ணம் நம்மிடையே நிலவவேண்டும்! "காக்கை குருவி எங்கள் சாதி நீள் கடலு மலையும் எங்கள் கூட்டம்" என்ற பாரதியின் பண்புகள் பரவவேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும்சிறந்ததுமாணவப்பருவம் என்று அறிவாளிகள் கூறுகின்றார்கள். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்று ஔவையார் கூறினார்; ஆதலின் இந்த இளம் மாணவப் பிராயத்திலேயே பண்பட்ட உள்ளத்தைப் பெற நாங்கள் முயல வேண்டும். உலகத்தின் ஒளி விளக்கான மகாத்மா காந்தி யார்? பிரதமர் நேரு யார்? செனநாயகா யார்? ஜீ. ஜீ. பொன்னம்பலம் யார்? இவர்கள் எல்லோரும் நம்மைப் போன்று ஒரு காலத்தில் மாணவராய் விளங்கியவர்கள் தானே. இப்போதிருக்கும் மாணவ உலகிடையே எத்தனை காந்திகள் நேருகள் செனநாயகாக்கள் பொன்னம்பலங்கள் தோன்றுவார்களோ? யார் கண்டது? அப்படித் தோன்றிவிட்டால் இப்போது உலகிடையே நடைபெறும் செயல்கள்போன்று, நாம் பெரியவர்களான பின்பும் நடைபெறலாமல்லவா?

இன்று நாங்கள் பாலர்கள், நாளைக்கு நாம் எல்லாரும் பெரியவர்கள். நமக்குள்ளே கவிஞர் இருப்பர்; உழவர் இருப்பர்; எழுத்தாளர் இருப்பர்? இன்னும் பலதிறத்தினரும் இருப்பார்கள். இவையெல்லாவற்றையும் நாம் சிந்திக்கவேண்டும். சின்னப் பையன் என்ற எண்ணமில்லாமல், மொழிக்கேற்ற அல்லது நாட்டுக்கேற்ற, நம்மால்முடியுமான, தொண்டுகளைச் செய்யவேண்டும்.

காலம் பொன்போன்றது. விலையேறப்பெற்றது. சென்ற காலம் திரும்பவும் வராமாட்டாது. எமக்கு இன்னும் தொண்டுகள் செய்யக் காலம் இருக்கின்றது என்று பின்போடவேண்டாம். நம்மால் முடியுமான வரையிலே தொண்டாற்றப் புறப்படுங்கள்! இன்று பாலர்கள்; நாளை சுதந்திர நாட்டின் தூண்கள் நாம்!

## பிறந்ததின வாழ்த்துக்கள்

**31-10-48 — 13-11-48**

மே.98: மு. சீதாதேவி; மே.7: செ. செல்வேந்திரன்; மே.113: யோ. சற்குணராசா; மே.186: த. சச்சிதானந்தம்.

●

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## மாமா பதில்

**மா. ஜெகதீஸ்வரி கி.239;** மருமகளே, கதைகள், கட்டுரைகள் முதலியன எழுதியனுப்பிப் பாலர் பகுதியை அலங்கரிக்கவும். இவைகள் தான் நீர் செய்யும் பணி.

**க. நல்லரெத்தினம், மே.112:** உமது கட்டுரை கிடைத்தது. நான் நல்ல சுகமேயிருக்கிறேன். உமது கட்டுரை பிரசுரம் பெறும்.

**த. நாகலிங்கம், மே.218:** உமது கட்டுரை கிடைத்தது. வசனப்பிளை, சொற்பிளை, எழுத்துப்பிளை என்பன தவறு. பிழை என்பதே சரி.

**ம. நவரத்தினம், மே.228:** உம்மை என் மருமகனுக்கிக் கொண்டேன்.

## மருமக்கள்

மே.228: மயில்வாகனம் நவரெத்தினம், இ. கி. மி. பாடசாலை, சித்தாண்டி; மே.229: அப்துல் கஸீம், கி.230: வீரபத்திரன் முருகப்பா, கி.231: சிதம்பரம்பிள்ளை மகாதேவா, மே.232: பெருமாள் வேலுச்சாமி, கி.233: காளியண்ணன் பழனியாண்டி, மே.234: மொகமெட் லாபெயிர், கி.235: கந்தையா பரமேஸ்வரன், மே.236: மொகமெட் ஸலீம், மே.237: வயித்திலிங்கம் மாணிக்கம், மே.238: ஏகாம்பரம்பிள்ளை சுப்பையா, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 229 தொடக்கம் 238 முடியவுள்ள மருமக்கள் யாபேரினதும் விலாசம்: தர்மதூதக் கல்லூரி, வதுளை; கி.239: மார்க்கண்டு ஜெகதீஸ்வரி, தமிழ்ப்பாடசாலை, இப்போ ரோட், குவாலாலம்பூர்.

# குதிரை மலை

**லூயிஸ் அந்தோனியாள் — கி.217**

புத்தளத்திலிருந்து வடக்கே சுமார் 16 கல் தொலையில் ஓர் உயர்ந்த மலையுளது. இது உருவத்தில் குதிரை முகத்தை யொத்திருந்ததினால் குதிரை மலையென்று அழைக்கப்படுகின்றது. இது சரித்திரப் பெருமை வாய்ந்த ஒரு இடம். அதிசயித்தற்குரிய அரும் பெருங் கட்டிடங்களின் சிதைவுகள் அங்கே காணப்படுகின்றன. பூர்வத்தில் இதே அல்லி அரசாணியின் அரசிருக்கை யென்று அப்பகுதி வாசிகள் கூறுவர். தற்பொழுது சனசஞ்சாரமற்ற காடாகவே கிடக்கின்றது. ஆயினும் இதன் வரலாற்றைக் கேள்வியுற்றோர் பலபாகங்களிலுமிருந்து வந்து அவ்வப்போது பார்த்துச் செல்கின்றனர். சில வருடங்கட்கு முன் உண்மையாகவே நடந்ததென இப்பகுதி வாசிகள் கூறும் ஒருகதை மிகவும் புதுமையானது. செல்வந்தனும், சிங்கள சாதியைச் சேர்ந்தவனுமான ஒரு மீன் வியாபாரி குதிரை மலையைப் பார்ப்பதற்காகச் சென்றான். அன்று அமாவாசைத்தினம். குறித்த இடத்தைச் சேர மாலையாகிவிட்டது. கடைகளும், கடைத்தெருக்களும், பாரிய கட்டிடங்களும், பாதைகளும், மின்சார விளக்குகளும், மோட்டார்ப் போக்குவரத்தும் எல்லாம் ஒரு பெரிய பட்டினம் போலவே காட்சியளித்ததாம். பட்டினப் பழக்கப்படி அவ்வியாபாரி ஒரு சாப்பாட்டுக் கடைக்குப் போய்த் தான் வைத்திருந்த 500 ரூபாவையும் அதன் சொந்தக்காரரிடம் கொடுத்துப் பற்றுச் சீட்டும் பெற்றுக்கொண்டு, பசியாறச் சாப்பிட்டு விட்டு, ஓரறையில் சுகமாகப் படுத்துறங்கினான். காலையில் நித்திரை விட்டெழுந்து பார்த்தவன் சிதைந்த கட்டிடங்களையும், அடர்ந்த காட்டையுந் தவிர வேறொன்றையுங் காணாதவனாய் அதிசயத்தோடும், துக்கத்தோடும் திரும்பிவந்தான். கரைத்தீவு என்னும் கிராமத்தை யடைந்து அங்கே வசிக்கும் ஒரு முதிர்ந்த பெரியாரிடம் இச் சம்பவத்தை வியாபாரி சொன்னான். இதைக்கேட்ட அப் பெரியார் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு அது பேயின் மாய்கை. அடுத்தமாதம் அதே நாளில் அஞ்சாமல் மீண்டும் அவ்விடத்திற்குச் சென்றால் சந்தேகமின்றி உமது பணம் கிடைக்கும் என்று சொன்னார். வியாபாரியும் அப்படியே குறித்த நாளில் சென்றான். முன் கண்டதுபோன்ற நகரம் அப்படியே காட்சியளித்தது. சாப்பாட்டுக் கடையும் இருந்தது. உடனே போய்ச் சொந்தக்காரனிடம் பற்றுச் சீட்டைக் கொடுத்துத் தன் பணத்தைப் பெற்றுக்கொண்டு சந்தோஷத்தோடு வீடு திரும்பினான். இது தான் கதை. நிஜமோ பொய்யோ யாருக்குத் தெரியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத்து மீனாட்சி

அந்த வார்த்தைகள் மீனாட்சியின் காதுகளில் நாராசம்போல் வீழ்ந்தன! 'புல்லு வெட்டி'யைத் தூர எறிந்து விட்டு வெடுக்கென்று நிமிர்ந்து நின்று "சீ; அப்புக்கெட்டவனே! மூடு உன் வாயை. இந்தத் தோட்டம் இல்லாவிட்டால், பரந்த இந்த உலகத்தில் எனக்கு இடமேயில்லையா? என்ன வார்த்தைகள் இவை? நீயும் ஓர் ஆண்மகனா? உன் மனைவியை வேறு ஒரு ஆடவனுடன்......" துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது! வார்த்தைகள் வெளிவர மறுத்து விட்டன. கண்கள் கலங்கப் 'புல்லு வெட்டி'யை எடுத்து மறுபடியும் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள். ஆனால், மனமோ எண்ணாத வெல்லாம், எண்ணிக் கொண்டிருந்தது!

மீனாட்சி தோட்டத்திற்குப் புதியவள். அவள் கணவன் அந்தக் கங்காணியின் காதுகளில் தொங்கிக் கொண்டிருந்த 'குவளை'க்கடுக்கனிலும் —விரல்களில் பிரகாசித்த கணையாழிகளிலும் — அவன் பசப்பு வார்த்தைகளிலும் எடுபட்டு மனைவியுடன் இலங்கைக்கு வந்தான். அவள் தனது அடர்ந்து வளர்ந்த கூந்தலை நடுவில் வெட்டிப் பிளந்து வாரி முடிந்திருப்பாள். கட்டுக் கடங்காத மயிர்க்கற்றைகள் காற்றிலே பறந்துகொண்டிருக்கும்.

அவள் நடக்கும்போது அவள் கால்களிலுள்ள தண்டைச் சிலம்புகள் கட்டியம் கூறும். இவளைப் பார்த்த மற்றப்பெண்கள் "அடி பார்ப்போமே, இவள் குலுக்கும் மினுக்கும் எத்தனை நாளைக்கு" என்று தம்முள் பேசிக் கொண்டனர்.

கச்சுக்குள்ளே பம்பிக்கொண்டிருந்த மார்பு—மருண்ட பார்வை—கைதேர்ந்த சிற்பி செதுக்கிவிட்ட சிலைபோன்ற பொன்மேனி — ஒரு பிடி இடை—பட்டுப் போன்ற கன்னம்—இவை அத்தோட்டத்திலுள்ள ஒவ்வொருவர் மனத்தையும் சிதற அடித்தன! அவள் அதர அமுதத்தைச் சுவைத்துவிட ஏங்கிக்கொண்டிருந்தனர். ஆனால், அவள் கபடமறியாதவள். எத்தனையோ பேர் அவளுக்குக் கண்களால் பேசிப் பார்த்தார்கள். அவளுக்கு அப்பொழுது அவர்கள் பாஷையின் அர்த்தமே புரியவில்லை!

வேலை பார்க்கவரும் 'கண்டாக்கையா' அவளருகே வந்துவிட்டால் வேலை பார்ப்பதை விட்டு, அவள் அழகைப் பார்த்து மயங்கி நிற்பான். 'மதுவுண்ட நரியைப்போல'— அவள் வேலையைப் புகழ்ந்து கொள்வான். ஆமா, அவ வேலை மிகவும் உசத்தியாயிடுச்சு, நம்ம வேலையேன் பிடிக்கு அவாளைப்போலே குலுக்க மினுக்க, நம்மளுக்குத் தெரிஞ்சாத்தானே". என்பாள் அருகில் இருக்கும் கறுப்பாயி. 'கண்டாக்கையா' பல்லை இளிப்பார். அவ்வளவுதான்.

அவளை எப்படியும் அடைய வேண்டும் என்று தீர்மானித்த 'கண்டாக்கையா' கங்காணியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டான், நாணத்தையும், சுயமரியாதையையும், அந்தஸ்தையும் தூர எறிந்து விட்டு!

"ஏ! குட்டி நீ நினைத்தால் மகாராணியாட்டமிருக்கலாமோ இல்லையோ? தலையில் நின்று தபசு பண்ணினால் கூட இப்பாக்கியம் எல்லோருக்கும் கிட்டுமா? சும்மா வருகிற சீதேவியை உதைத்துத் தள்ளுகிறாயே. நான் சொல்லுவதைக் கேள். இன்று மாலை குளித்து விட்டு புதிசு உடுத்து அவர் வங்களாவுக் குப்போ! அப்போ பிழைத்தாய். இல்லையோ, நம்ம துரை உன்னைத் தொலைத்துப் புடுவார் தெரிஞ்சுக்கோ" என்றான் கங்காணி. இவ்வார்த்தைகள் நாராசம் போல் பட அன்று அவள் கோபித்தாள்.

"சரி உன் வாய்த்துடுக்கையெல்லாம் அடக்குகிறேனா இல்லையோபார்" என்று, வாய் நிறைய இருந்த வெற்றிலை பாக்குத் துவையலை உமிழ்ந்து விட்டு எட்டிநடந்து விட்டான் கங்காணி.

* * *

**நாட்கள்** சென்றன. மாற்றங்கள் அநேகம் ஏற்பட்டன! இராமசாமி, மீனாட்சியின் கணவன், நண்பர்களுடன் கூடிக் குடிக்கத் தொடங்கி விட்டான்! ஒருநாள் "இது என்ன! என்றுமில்லாத மணம் ஒன்று வீசுகின்றதே" என்றாள் இராமசாமியைப்பார்த்து.

"அது.....வா.....அ....து... என்...னு... டை....தேன்.... இ...லை...இல்....லா...வி.....ட் ....டா....ல்... நா.....ன்....செத் ...த...வி...ட...த்.... துப்..... புல்லும்.........."

என்று மது வெறியிலே பிதற்றத் தொடங்கி விட்டான்.

"ஆ! தெய்வமே இது என்ன சோதனை. இதன் நாற்றத்தையே என்னால் சகிக்க முடியவில்லையே. இதை, எப்படிக் குடிக்கக் கற்றுக் கொண்டீர்கள். இதையா தேன் என்கிறீர்கள்" என்றாள் மீனாட்சி.

"தேன்....தேனா...சீ...அத னி...லும் இனி....மையானது அதை...க்குடி....த்...து வி...ட்... டால் .... பூலோகமே ....தேவ...லோகம்...மாதிரி... என்ன... குஷி ... தெரியுமா? சும்மா...போடி ... சும்மா ... நீ....என் ... இந்திராணி... இங்கே...வா.......என்... அருகில் ......." என்று அவளை அருகில் இழுத்தான்.

"சும்மா விடுங்கள்! இந்த அரக்கனுக்கு அடிமையாகவா அந்தச் சீமையிலிருந்து இங்கே வந்தோம். இந்தச் சீமையும் இப்படியா சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. என்ன மழை, வெய்யில் — என்றும் பாராமல், எருதமலையேறி— உயிரையும் மதியாமல்—உதிரத்தைப் பிளிந்து உழைத்து இந்த மது அரக்கனுக்கா தாரைவார்ப்பது! அடி! மாரியம்மே, நீ என் புருஷனை இவ்வாபத்தினின்றும் காக்க மாட்டாயா? உனக்குப் பெரிதாகப் பொங்கல் பண்ணுகிறேன்" என்றாள் மீனாட்சி.

"குடித்தால் பிறக்கும் குஷியையும் உற்சாகத்தையும் எங்கே அறிவாய்! நாளைக்கு வரும்பொழுது கையோடு உனக்கும் ஒரு சுண்டு கொண்டு வந்து விடுகிறேன். நீயும் நானும் குடித்துவிட்டு......" அவள் கையைப் பிடித்து அருகே இழுத்தான்.

"சீ! விடுங்கள் என்னை. இனிமேல் குடிப்பதில்லையென்று வாக்குக் கொடுங்கள். இன்றேல்...."

(இடைமறித்து) "அடியே வேண்டாம்; வேண்டாம். உன் நிபந்தனை. இன்றுடன் விட்டு விடுகிறேன் குடிப்பதை" என்றான் இராமசாமி.

ஆனால் 'குடிகாரன் பேச்சு விடிந்தாற் போச்சு' என்பார்களே. அவ்விதிக்கு இவன் மாத்திரம் விலக்கா? என்ன?

மறுநாளும் அப்படியே... இப்படித் தினம் குடித்துவிட்டு வருவதாயிருந்தான். சிற்சில சமையங்களில் காலம் கழித்தும் வருவான். அப்பொழுதெல்லாம் விழித்திருந்து வரவேற்பாள். அவள் கண்கள் அழுது அழுது வீங்கியிருப்பதை, மதுவெறியில் வருபவன் எங்கே காணப்போகிறான். என்றைக்காவது தூங்கிவிட்டால் நல்ல அடியும் உதையும் கிடைக்கும்.

— சி. கு. —

**அன்று தீபாவளி:** தோட்டம் 'குடியிலும் கூத்திலும்' பெரும் அமர்க்களப்பட்டது. ஆண் பெண் குழந்தை குட்டி எல்லோரும் குடித்துக் குதூகலம் கொள்ளும் திருநாள். இவற்றைப் பார்த்த மீனாட்சிக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. ஏதோ தனக்கென இருக்கும் வீட்டைச் சுத்தஞ் செய்து தீபங்களை வரிசையாக ஏற்றி வணக்கம் செய்தாள். 'இதோ வந்துவிட்டேன், என்று வெளியே சென்ற இராமசாமியை இரவு மணி பன்னிரண்டாகியும்காணவில்லை. இரவு பகலாய்ப் பாடாய் உழைக்கும் தேகமோ இல்லையோ. வாயிற் கதவைச் சாத்திவிட்டுக் கயிற்றுக் கட்டிலிற் பாயை விரித்துச் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளப் படுத்தாள். மனம் வேதனைக் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தது. பழைய சம்பவங்கள் 'சினிமா றீல்' மாதிரி யோடிக்கொண்டிருந்தன. தாம் புதுத் தம்பதிகளாய் அனுபவித்த சுகம்—அந்த இன்ப லாகிரி அவன் அணைப்பிலே அவள் பெற்ற உற்சாகம்— எல்லாம் எங்கே? கற்பனை செய்து பார்த்தாள். கற்பனைக்கும் அப்பாற்பட்டு விட்டது! 'அவர் குடிக்கிறாராம்—அது மட்டுமல்ல—அந்தச் சிறுக்கி.... ஆ! தெய்வமே ஏன்! என்னை இவ்விதம் சோதிக்கிறாய்? இங்கே கணவன் குடித்துவிட்டு உபத்திரவம்; அங்கே கண்டாக்கையாவின் ... மற்றவர்கள் கூறுவதுபோல மண்ணொடு மண்ணாகும் தேகந்தானே, வேண்டுமென்றால் மனிதன் தன் மிருக இச்சையை...' கட்டிய கணவனுக்குஇரண்டகமா? ஒருபொழுதும் முடியாது; உயிர் போவ [illegible]

அவள் நினைத்தது ஒன்று.விதிநினைத்தது வேறு. கள்வனைப்போல அடிமேல் அடி வைத்து ஒருவன் உள்ளே நுழைந்தான். அவள் படுத்திருந்தாள். அருகே மின்னிக்கொண்டிருந்தது ஒரு சிறு கைவிளக்கு. அவள் கூந்தல் அவிழ்ந்து புரண்டுகொண்டிருந்தது கரு நாகங்கள்போல. அவள் முன்றானை சிறிது விலகியிருந்தது. நீண்ட கண்கள் மூடியிருந்தன. கட்டிலருகே மெல்ல மெல்ல நகர்ந்தான். தூரத்திற் கூகையொன்று தன் ஜோடியைத் தேடி அலறி அடித்துக்கொண்டிருந்தது.

அவள் மார்புமேலே கையை வைத்தான்............

"சீ! எடு ஐயா உன் கையை இந்நேரத்தில் இங்கே யார் உன்னை வரச்சொன்னது! தயவுசெய்து மரியாதையாக வெளியே போய்விடு. என் கணவன் வந்தால்...."

"அவன் எங்கே வரப்போகிறான். அவன்தான் குடித்துவிட்டு அந்தச் சிறுக்கி வீட்டிலே விழுந்து கிடக்கிறானே"

"வீணாகச் சப்தம் செய்யாதே"...என்று சொல்லிக்கொண்டே அவள் அதரங்களில்... 'பளீர்' என்று கன்னத்தில் அறைந்தாள். அவன் பிடியினின்றும் விலகத் திமிறினாள். ஆனால் அந்த இரும்புப் பிடியினின்றும் ஒரு ஏழைப் பெண்ணால் விலக முடியுமா? எவ்வளவோ முயன்று பார்த்தாள்—பல்லைக்காட்டி இரந்தாள் — ஒன்றும் வாய்க்கவில்லை.

அடிபட்டவனுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது... அவளை வலுவில் கட்டி...

பிறகு அவன் மனம் வேதனைப்பட்டது. தன்செயல் ஓர் ஆண்மகன் செயலாவென்று திரும்பித் திரும்பிச் சிந்தித்தது. வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்னத் தொடங்கி விட்டது. அவள் முகத்தைப் பார்க்க அவனுக்கு இப்போது தைரியம் இல்லை. இரவோடு இரவாய்ச் சவுக்கடிபட்ட நாய் மாதிரித் தலையைத் தொங்க விட்டுக்கொண்டுஓடிவிட்டான்.

அவள் தண்ணீரில்லாது துவண்டு சோர்ந்து கிடக்கும் கொடியைப்போலக் கிடந்தாள். மனம் பதறியது. கண்களிலிருந்தும் நீர் பெருகியது. கூந்தல் அலங்கோலமாகத் தோள்மேலும் மார்புமேலும் கிடந்து புரண்டது. மதிக்கமுடியாத இரத்தினத்தைப் பறிகொடுத்த நாகம்போல மனம் எதை எதையோ சிந்தனை செய்து பதறியது. ஏதோ முடிவுக்கு வந்தவள் மாதிரி அலங்கோலமாகக் கிடந்த உடைகளைச் சீர்ப்படுத்திக்கொண்டாள்.

அன்று கங்காணி சொன்ன மாதிரி இன்று அவள் இராணி; உச்சிமலையில் ஓர் அழகிய வீடு. அவள் வேலைக்கே போவதில்லை. ஆனால் பெயரேட்டில் மட்டும் அவள் வரவுக்கே குறைவு இல்லை. 'கண்டாக்கையா' கடாட்ஷமோ இல்லையோ? பகலெல்லாம் தன்னிடமுள்ள ஆபரணங்களை வைத்துச் சிங்காரிப்பாள். பிறகு புறப்பட்டு விடுவாள். இப்போது அவள் ஓர்..............






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஜய குமாரன்

இலங்கையர்கோன்

### நாடக பாத்திரங்கள்

சிங்கபாகு — சிங்கபுரியின் அரசன்
அரசி
விஜயன்—சிங்கபாகுவின் மகன்; பட்டத்து இளவரசன்
அபயவாஸன், பாண்டுதேவன், கருணமித்தன் } விஜயனுடைய நண்பர்கள்
வாஸன் — விதூஷகன்
சுமித்தன் — விஜயனுடைய தம்பி
ரஞ்சிதா — ஒரு கணிகை
குவனு — இயக்க அரசி
ஒரு யக்க தலைவன்
பாண்டியன் மகள்
போர்வீரர்கள், பணிப்பெண்கள், விவசாயிகள், யக்கர்கள் முதலியோர்.

நாடக களம்: கூர்ஜரத்தில் உள்ள சிங்கபுரியும் இலங்கையும்.

காலம்: கி. மு 5. ம்-நூற்ருண்டு.

### காட்சி 13

இடம்: காடு.
காலம்: இரவு – முழுநிலவு.

[ஓர் அருகிற் குவித்த காட்டு விறகு தீவறையாக எரிந்து கொண்டிருக்கிறது. இயக்க ஆண்களும் பெண்களும் ஆழ்ந்த குரல் கொண்ட ஒற்றைப் பறையின், லயத்திற்குப் பாடி ஆடுகின்றனர். ஆட்டம் முடிந்ததும் எல்லோரும் வட்டமாக உட்காருகின்றனர். ஒரு பூசாரி தன்முன் பச்சை இறைச்சி, தேன் முதலிய வறறைப் பரப்பி வைத்துக் கொண்டு கையில் ஒரு புலி வாலை வைத்துச் சுழற்றி வேகமாக ஏதோ மந்திர ஜபம் செய்கிறுன். இயக்கத் தலைவனும் இன்னெரு இயக்கனும் ஒரு பக்கத்தில் இருந்து தாழ்ந்த குரலில் சம்பாஷிக்கின்றனர்.]

**இய. தலை:** இவைகளினுல் என்ன பயன் ஏற்படப் போகிறது? புற்றில் ஊற்றிய தேன் மீண்டும் வருமா? இந்தக் கொடிய தெய்வத்தின் முன்னிலையிலேயே என் உயிரை மாய்த்துக்கொள்வேன்.

**இயக்கன்:** நீயா—எங்களுக்கு அமைந்த ஒரே தலைவனுகிய நீயா—இப்படித் தைரியம் இழந்து பேசுவது? மேல் வருவதைச் சிரத்தையோடு அஞ்சாமல் செய்வதல்லவோ வீரனுக்கு அழகு...

**இ. த:** ஹூம், என்னுடைய எண்ணங்கள் அத்தனையும் பாழாய்ப் போயினவே. குவனு என்மேல் எவ்வளவு பிரியம் வைத்திருந்தாள்... இந்த வெள்ளைத்தோல் மனிதன் வந்து அத்தனையும் பறித்துக்கொண்டு விட்டானே. குவனு, அவனே தெய்வம் என்று அலைகிறுள்... முன்பின் அறியாத ஒரு நாடோடியை வரித்ததினுல் யக்கர் குலத்திற்கு ஈனம் தேடிவிட்டாள்...

[பூசாரியின் முணுமுணுப்பு உறுமலாக மாறுகிறது.]

**இய:** அதனுல் என்ன முழுகிப்போய்விட்டது. அந்த வெள்ளையனுடைய உடல் இரும்பினுல் ஆக்கப்பட்டதல்லவே. கற்கோடரி அவன் கழுத்திற் புதையச் சக்தியற்றுப் போய்விடுமா...? எதற்கும் தெய்வம் என்ன ஆஞ்ஞை செய்கிறது பார்ப்போம்.

[பூசாரி எழுந்து நின்று ஆடுகிருன். கூ! கூ!! எனச் சத்தம் இடுகிருன்.]

**பூசாரி:** ஓஹோ ஓ ஓ ஓ! இயக்கரைக் காக்கும் சண்டிஹேச்வரியடா! குலம் வளர செங்குருதி பாயவேணுமடா! மந்தையில் புகுந்த புலி மடியட்டும்! அடே என் கண்மணிகாள்! புலி—கொல்லும் புலி! புலியின் இரத்தம் ஆறுபோல் பாயட்டும்... அன்றேல் இயக்கர் குலத்திற்கு நாசம்! நாசம்!! சொன்னேன், சொன்னேன். புலியின் இரத்தம்; இரத்தம்.

[ஓய்ந்து விழுகிருன்]

**இய:** பார்த்தாயா தெய்வத்தின் கட்டளையை! இனியும் யோசனை செய்துகொண்டு சும்மாவிருந்தால் இயக்கர் குலம் பூண்டோடு அழிந்துபோவது திண்ணம். அந்த வெள்ளையன் தொலைந்தாற் பிறகு குவனு உன்னுடையவள்... நாளை மாலையே புலிப்படையினர் நால்வர் சென்று அவன் தனிமையாக இருக்கும் சமயத்தில் வேலையைத் தீர்த்துவிடட்டும். அவன் முதலில் தொலைந்தால் மற்றவர்கள் சின்ன பின்னப்பட்டுப் போவார்கள்...நாளைக்கே.

**இ. த:** என் மனதில் தயக்கம் தீரவில்லை. அவன் சாகாவரம் பெற்றவன் என்று ஏதோ கூறுகிறது. புலிப் படையும், அதற்கு மேலான சிம்மப்படையும், பைசாசப்படையும் அவனை அழிக்க

சரித்திர நாடகம்

மாட்டாது. அவனுடைய இரும்பு வாள் எதையும் வெட்டி வீழ்த்திவிடும்....

**பூசாரி:** [நிலத்தில்கிடந்தபடி] இரத்தம்! இரத்தம்!!

**இய:** சண்டியின் வாக்கு இதுகாறும் பொய்த்ததில்லையே. அவள் கட்டளையை நிறைவேற்றுவது எமது கடன்.

**இ. த:** அவள் விட்ட வழி. புலிப்படையினர் சித்தமாகட்டும்...சண்டிக்கே அவன் பலியாகட்டும்...

[பறை அதிருகிறது. எல்லோரும் "ஹோ" என்று ஆர்ப்பரிக்கின்றனர்.]

—திரை—

### காட்சி 14

இடம்; குவனுவின் வீட்டருகில் ஒரு சோலை.
நேரம்: மாலை.

[விஜயன் அங்கும் இங்கும் நடக்கிருன். அபயவாஸனும் பாண்டுதேவனும் தரையில் உட்கார்ந்திருக்கின்றனர். கருணமித்தன் ஒரு மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு ஆடுகிருன்.]

**அபய:** விஜய, நீ எங்கு போனுலும் அதிஷ்டமும் உன்னைத் தொடர்ந்து கொண்டே வருகிறது. இந்தத் தீவாந்தரத்திலும் ஒரு அரசியே உனக்குப் பெண்ணுக வாய்த்துவிட்டாள்...

**பாண்டு:** ஆமாம்.

**கருணு:** வெறுமனே ஏன் பொருமைப்பட்டுச் சாம்புகிறீர்கள். தொண தொண என்று எந்நேரமும் இதே பெண்பித்துத்தானு?

**அபய:** ஆமடா, நீமட்டும் பெரிய தபசி.

**விஜய:** அபயே, வேணுமானுல் நீயும் யாராவது ஒரு இயக்கப் பெண்ணைப் பார்த்துப் பிடித்துக்கொள்ளேன். அதுவும் நானு தேடித் தர வேண்டும்...போங்கடா மூவரும் வெளியே. என்னை அமைதியாக இருக்கவிட்டு.

**அபய:** என்ன விஜய—

**விஜய:** போங்கள்......

[மூவரும் போகிருர்கள்]

**விஜய:** [மறுபடி அங்கும் இங்கும் நடக்கிருன், நிலவு மெதுவாகப் பகலை மறைக்கிறது.]

எதிலும் பற்றில்லாமல் வந்தது வந்தபடி ஏற்றுக்கொண்டு திருப்தி அடைந்திருந்த என் உள்ளம் ஏனே இந்தத் தீவாந்தர நாட்டின்மேல் இவ்வளவு பற்றுக் கொண்டுவிட்டது? அறியாமையிற் கிடந்து உழலும் இம் மக்களை—பச்சிளங் குழந்தைகள்போல் அப் உள்ளம் படைத்த இயக்கர்களை—நாகரீகப்படுத்தி விடுவதனுல் அவர்கள் மேம்பட்டு விடுவார்களா? அவர்களுக்கு அதனுல் மகிழ்ச்சி ஏற்பட்டுவிடுமா?

[அருகில் திடீரென்று புலி உறுமுவதுபோல் சத்தம் கேட்கிறது. காய்ந்த இலைகள் சலசலக்கின்றன. விஜயன் தன் உடைவாளின் பிடியைத் தொட்டுப் பார்த்துக்கொள்கிருன்.]

விலங்குகள்போல் இன்னும் உடலின் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்துவரும் மக்கள்...

[திடீரென்று புலி வேடம் தரித்த நால்வர் மரங்களின் மறைவில் இருந்து அவன்மேல் பாய்கின்றனர். புலி நகம்போல் கூர்ந்து வளைவுகொண்ட வெள்ளிய ஆயுதங்கள் அவர்கள் கைகளிற் பளிச்சிடுகின்றன. விஜயன் சட்டென்று விலகி வாளை உருவி அவர்களை முன்னேக்கி எதிர்க்கிருன். மூவர் வாளுக்கிரையாய் மடிகின்றனர். ஒருவன் தப்பி ஓடுகிருன்...குவனு ஓடி வருகிருள்.]

**குவனு:** புலியின் உறுமலை முதலில் கேட்ட உடனேயே நான் நினைத்தேன் ... நாதா தங்களுக்கு ஒரு ஊனமும் இல்லையே....

**விஜய:** ஒன்றும் இல்லை... ஆனல் இதன் அர்த்தம் என்ன?

**குவனு:** அர்த்தம் வெளிப்படையாகத் தெரிகிறதே. இயக்கர்களின் புலிப்படை தங்களை இன்று தாக்கி இருக்கிறது. அவர்கள் தங்களைப் பகைவனுகக் கருதித் தங்கள் உயிரைப் பருக எண்ணிவிட்டார்கள். இனிச் சிம்மப் படை, பைசாசப்படை எல்லாம் வரும். எனக்குப் பயமாக இருக்கிறது.

**விஜய:** ஹ ஹ ஹ [சிரிக்கிருன்] குவனு நீ பேதை! என் கையில் இந்த வாள் இருக்கும் வரையும் என் உயிரைப் பருகுவது அவ்வளவு இலேசான காரியம் அல்ல... இயக்கர்கள் எல்லோருமே திரண்டுவந்தாலும் என்னை ஒன்றுஞ் செய்ய முடியாது...

**குவனு:** [விஜயனுடைய மார்பில் முகத்தைப் புதைத்து] நாதா, தாங்களே இந்நாட்டின் அரசனுக வேண்டும். தங்களுக்காக என் பதவி தலைமை எல்லாம் துறந்துவிடச் சித்தமாக இருக்கிறேன். தங்களுடைய தலைமையில் இத்தேசம் எவ்வளவோ மேன்மையடையும். தங்கள் கம்பீரமும் வீரமும்....

**விஜய:** நீ என்மேல் கொண்டிருக்கும் அன்பினுல் இல்லாத பெருமையெல்லாம் என்மேல் ஏற்றிப் பேசுகிறுய். நீ 'வீரன்' என்கிறுய். என் தந்தை என்னைத் துஷ்டன் என்று சொல்லிநாடுகடத்தினுன்....

**குவனு:** எனக்குத் தாங்களே எல்லாம். தாங்கள் என்மேல் சிறிதளவேனும் பராமுகமாய் இருந்தால் நான் இறந்துபோவேன். என் உடலை அங்கம் அங்கமாக வெட்டிப் போட்டாலும் தங்கள் குரல் கேட்ட உடன் ஒவ்வொரு அங்கமும் காதலால் நடுங்குமே... என்னிடம் அழகு இல்லை. தங்களுக்கேற்ற கல்வி இல்லை. ஆனல் என் அன்பு இந்தக் காடுபோல் நெருங்கிப் படர்ந்து கிடக்கிறது. தங்கள் மார்பின்மேல் கிடந்து என் உடலும் மனமும் ஒரே கண்ணீர்ப் பிரவாகமாய் உருகி மறைந்து போகவேணும் போல் எனக்குச் சிலசமயம் தோன்றுவது உண்டு...

**விஜய:** அறிவேன்—அறிவேன். குவனு உன்னுடைய இவ்வளவு அன்பிற்கும் நான் தகுந்த பாத்திரமா என்று சிலசமயம் நினைப்பதுண்டு. முதலில் இயக்கர் பெண் என்று மனதில் சிறிது வெறுப்பு ஏற்பட்டது. உன் களங்கமற்ற அன்பு அதை நாளடைவில் அறவே ஒழித்துவிட்டது. தோல் அழகை துச்சமாக மதிக்கும் அளவிற்கு நீ என் மனதைப் பண்படுத்திவிட்டாய். இன்று தேவரம்பையே என்முன் வந்து நின்றுலும், அவளை "விலகிநில்" என்று சொல்லக்கூடியவனுக இருக்கிறேன். ஆனல் இயக்கப் பெண்ணே, உன்னிடம் அழகு இல்லை என்று யார் சொன்னுர்கள்? உன் நிமிர்ந்த மார்பும அலைபுரளுங் கூந்தலும் பளிச்சிடும் பல் வரிசையும் அன்ன நடை போட்டுச் செல்லும் என் இரத்தத்தைத் திடீரென்று நரம்புகள் தெறிக்கும்படிகுமுறிப் பாயச் செய்கின்றனவே...

**குவனு:** [வெட்கித் தலை குனிந்து] போங்கள், உங்கள் ஆரிய நாட்டில் பெண்களை இப்படித்தான் பரிகாசம் பண்ணுவார்களோ...

**விஜய:** அன்று குளத்தருகில் என்னை முதலிற் சந்தி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Oct 31, 1948 | No. 16

## முதல், கரு, உரிப் பொருள்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினூர், எவ்விடத்தும் எக் காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனுக இல்லது புணர்த்தன் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம்போல யாதானுமொரோ வழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்தல் ஒப்புமை நோக்கி. மற்று இல்லோன் தலைவனுக இல்லது புணர்க்கும் நாடக வழக்குப் போல"க் கொள்ளற்க எனவும் அகத்திணை 53-ம் சூத்திரவுரையில் "இதனுள் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றுங் கூறலின் நாடக வழக்கும் தலைவனைத் தலைவி கொடுமை கூறல் உலகியலாதலின் உலகியல் வழக்கும் உடன் கூறிற்று. இவ்விரண்டுங் கூடி வருதலே பாடலுட் பயின்ற புலனெறி வழக்கம். இவ்விரண்டினும் உலகியல் சிறத்தல் 'உயர்ந்தோர் கிளவி' என்னும் பொருளியற் சூத்திரத்தானும் மரபியலானும் பெறுதும்" எனவும் உரை கூறுமாற்றால் அறிக.

7. இதனுல் பண்டிதர் அவர்கள். புலவன் அசுத்தபாத்திரத்திற் சுமத்தி அசுத்தப்படுத்தாமல் x. y. ல் வைத்து வெளிப்படுத்தினன்றான் எனவும், உலகபாத்திரத்தில் வைத்துக் கூறக் கூடாத மிக்க பரிசுத்தமாகலாம், புலவன் முகந்து கொண்ட உரி யெனவும் கூறிய பொருள்கள், பொருளதிகார மரபு திறம்பியவையாதல் தெரித்தாம். இனித் தலைவன் தலைவியெனவே அகத்திணை நூல்களெல்லாம் ஆட்சி பெற்று வருகின்ற பொதுப் பெயர்களைப் புதிதாகக் கண்ட ஆராய்ச்சி முடிவுபோல x. y. என்றும் பின் x. அப்பன் y. அம்மையென்றும் பின் அவற்றையே தலைவன் தலைவியென்றுங் கூறிய பண்டிதர் அவர்களின் வல்லமைப்பாடு தமிழ்ப்புலவர்க்கோர் புது விருந்தாகும்.

8. எனவே இத்துணையுங் கூறிய வாற்றால் பண்டிதர் அவர்கள் முதல் கரு உரிப் பொருளை முறையே சந்தர்ப்பம் பாத்திரம் உணர்ச்சியெனப் பொருத்திக் காட்டிய முடிவுகள் தொல்காப்பியர் மரபுடன் மாறுபடுகின்றதென்பதையும், நிகழ்ச்சியாகிய உரிப்பொருள்களை யாண்டும் ஆசிரியர் உணர்ச்சி யெனக் கூற்றிலரெனவும், இங்ஙனே முதல் கரு என்பவற்றைச் சந்தர்ப்பம் பாத்திரம் எனக் கொள்ளுதல் ஆசிரியர் கருத்தன்றென்பதையும் விளக்கினும்.

## விஜய குமாரன்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தபொழுது எவ்வளவு துடுக்காகவும், அவமதிப்பாகவும் பேசினுய்? இன்று ..

**குவனு:** அன்று நான் அரசி இன்று அடிமை. தங்கள் சிறு விரலிற்கே ஊறு நேர்ந்தாலும் தாங்காது இறந்து படும் அடிமை... உண்மையில் எனக்கும் பயமாகவே இருக்கிறது. இன்று தங்கள் மேல் புலிப்படையை ஏவியவர்கள் நாளை எதுதான் செய்ய மாட்டார்கள்? இதற்குக் காரணமானவர்களை ஒழித்தால் அன்றி...

**விஜய:** குவனு இது என் நண்பர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய விஷயம். நீ கோபிக்க மாட்டாயே...

வாயில் விரலை வைத்துச் சீட்டி அடிக்கிருன். குவனு விலகி உட்கார்ந்து கொள்கிருள். அபய வாஸனும், பாண்டுதேவனும், கருணமித்தனும் வருகிருர்கள்.]

**கருணு:** என்ன விஜய அப்பொழுது நாய்களை விரட்டி அடிப்பதுபோல் எங்களைத் துரத்தினுய். பிறகுஇப்பொழுது ஏன் அழைத்தாய்?

**விஜய:** மன்னியுங்கள், அச்சமயம் என் மனம் ஏதோ சஞ்சலப்பட்டிருந்தது. உங்கள் வியர்த்தமான பேச்சு என்னை வருத்திற்று. அதனுல் பொறுமை இழந்துவிட்டேன்... மன்னியுங்கள்.

**அபய:** உன் குணம்தான் எங்களுக்குத் தெரிந்ததாயிற்றே. எதையாவது நினைத்துக்கொண்டு எதிர்பாராதவிதமாக ருத்திர ரூபம் கொண்டு உன் அன்பர்கள்மேல் பாய்வாய்... நாங்கள் அதைப் பொருட்படுத்தமாட்டோம். நடந்ததென்ன?

**விஜய:** நீங்கள் போன பிறகு நான்கு புலிகள் மறைந்திருந்து என்மேல் பாய்ந்து என்னைக் கொல்லப் பார்த்தன அதோ மூவர் பிணமாகக் கிடக்கின்றனர்....மற்றப் புலி, கிலி பிடித்து ஓடிப்போய்விட்டது.

**குவனு:** இயக்கத் தலைவன் ஒருவனும் அவன் சகாக்கள் சிலரும் உங்கள் நண்பரைக் கொல்லச் சூழ்ச்சி செய்கின்றனர். இதுவே முதல் பிரயத்தனம்....இத்துடன் அதை அடக்கிவிட்டால் என்ன நேருமோ.

**பாண்டு:** இதில் என்ன அதிசயம்? எதிர்பார்த்திருந்ததுதானே. இதற்குக் காரணமாயிருப்பவர்களை வாளுக்கிரையாக்கிவிட்டாற் போகிறது.

**குவனு:** அது அவ்வளவு இலகுவான காரியம் அல்லவே. அவர்களை எப்படி அடையாளம் கண்டு கொள்வீர்கள்? கேளுங்கள். வருகிற பௌர்ணமியன்று இங்கிருந்து அரை நாள் நடை தூரத்தில் இருக்கும் ஊரில் இயக்கர்கள் பலர் கூடி ஒரு விழாக் கொண்டாடுவார்கள். இச் சூழ்ச்சிக்குக் காரணமாயிருப்பவர்களை நான் சமிக்ஞைசெய்து காட்டுவேன். அவர்களைக் கொன்று தீர்த்து விடவேண்டியது. மற்றவர்கள் அடங்கிப்போய்விடுவார்கள்.

**விஜய:** நீ இராணி அன்றோ? அதனுல்தான் இப்படி அருமையான யோசனை கூறினுய். என்ன அபய. கருணு?

**கருணு:**<br>
**பாண்டு:** } ஆம், ஆம்.

**விஜய:** என்ன அபய, உன்னிடத்தில் உற்சாகத்தைக் காணேம்?

**கருணு:** போன காரியம் சித்தியாகவில்லை. அபயனை மணக்க எந்தப் பெண்ணும் இசைவதாக இல்லை. பாண்டு அதிஷ்டசாலி' இராணியின் பணிப் பெண்ணையே மடக்கிவிட்டான்....

[குவனு சிரிக்கிருள்.]

**விஜய:** கருணு உன் விஷயம் எப்படி?

**கருணு:** என் விஷயந்தான் நீங்கள் எல்லாம் அறிந்ததாயிற்றே. நான் இயற்கைத் துறவி. பெண்கள் என்றுலே கசப்பு.

—திரை—

## சுதந்திரத்தின் விலை

(1ம்-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் மறைந்தார். அவர் கலையாக்கத்துக்காகச் செய்த முயற்சிகளைப் பாராட்டு முகத்தாற் சனிக்கிழமை (30-10-48) பிற்பகல் கொழும்பு நகரமண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெறும். மந்திரி பண்டாரநாயகா தலைமை வகிக்கின்றுர். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஸ்ரீ கே. கனகரத்தினம் அவர்களே இக்கூட்டத்தை ஒழுங்கு செய்கின்றுர். வேறு பெரிய புள்ளிகளும் இதிற் சேர்ந்திருக்கின்றனர். இவ்வளவு காலமிருந்துவிட்டு இப்போது இக்கூட்டம் நடைபெறுவதையிட்டுப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகின்றனர். இன்று நாட்டுமக்கள் அனைவரும் அரசியல் வாதிகளாகவும், கலை வளர்க்கும் பெரியோர்களாகவுமே காட்சியளிக்கின்றனர்.

## பி. பி. ஸி. போட்டி

லண்டன் வானெலியில் ஒலிபரப்பப்படும் தமிழ், சிங்களச் செய்திக் கடிதங்களைப் பற்றி நேயர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் ஒரு பரிசுப் போட்டி ஏற்படுத்தப்படுகின்றது. லண்டன் தமிழ்ச் செய்திக் கடிதம் வாரத்தில் இரண்டு நாட்கள், திங்கள் வியாழக்கிழமைகளில் ஒலிபரப்பப்படுகின்றது. இலங்கை நேரம் இரவு 7-45 முதல் 8 மணிவரையும், இந்தப் போட்டிக்கு விடைகள் யாவும் 1949 ஜனவரி 15-ம் திகதிக்கு முன்னர் 'தமிழ் ரேடியோ போட்டி' பி. பி. ஸி. லண்டன் என்ற விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும். ஏனைய விபரங்கள் அறிய விரும்புவோர் கொழும்பு வானெலி நிலையத்தாருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பான
# சரித்திர பாடப் புத்தகங்கள்
2-ம், 3-ம், 4-ம், 5-ம்' வகுப்புக்குரியன

ஆக்கியோன்:

ச. ஜெயவீரசிங்கம் B. A (Hons.)
சரித்திர ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்க வேண்டியதற்கு நியாயங்களாவன:

1. வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக் கமையும் படி இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2. இப்புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக்கதைகள் நீக்கப்பட்டுள்ளன.
4. இப்புத்தகங்கள் இலகுவான நடையி லெழுதப் பட்டன.
5. இப்புத்தகங்களிற் காணப்படும் சில பாடங்கள் ஆரம்ப வகுப்புக்களுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6. இப்புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது.

ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிகளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

[3542 - Viii]

## வியாபாரம் ஒருகலை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆளப்பிறந்தோர்

இத்தகைய கஷ்டங்களுக் கிடையே நாங்கள் எமது தேசீயப் பொருளாதாரத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கின்றது. ஆளப்பிறந்தவர்கள் பிறருக்கு அடிமையாகிக் கொள்வதை விரும்ப மாட்டார்கள் அல்லவா? ஏதோ வியாபார்கள் என்ற சாதி மாத்திரம் இலங்கையில் தோன்றுதது ஒரு பெரிய புண்ணியமாகும்.

இனி வங்கி விஷயத்துக்கு வருவோம். ஒரு காலத்தில் இலங்கை மக்கள் செட்டித் தெருவில் வாக்குறுதி உண்டியல் ('புரோநோட்') மூலம் வங்கி நடாத்திவந்தனர். இந்த விஷயத்திலும் பிறநாட்டினரே திறமையாக விளங்கினர்.

ஸ்ரீலங்கா கருக்கொண்டிருக்கையில் இலங்கையிற் பிறந்த ஒரு இந்தியன் வர்த்தக மந்திரியானுர். ஆகவே, இலங்கை வங்கி ஒன்றை அமைக்கும் யோசனை இவருடைய மூளைக்கு எட்டியது. வங்கி ஸ்தாபனத் துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த ஒரு இந்தியனைப் பிடித்து ஒரு திட்டத்தை மந்திரி தயாராக்கினுர். இது பெரிய வர்த்தகர்களுக்குத் திகிலை உண்டாக்கிற்று இலங்கை வங்கி தோன்றினுலும், அது இருவருட காலத்திற் பொலு பொலென வீழ்ந்து விடுமெனவும் சிலர் பயமுறுத்தினர்.

இதை எங்களில் அநேகர் நம்பினர். எங்களில் அனேகர் குறித்த நேரத்தில் ஒரு விஷயத்தைச் செய்து முடிப்பதில்லை. ஒருவரைப் பத்தரை மணிக்குச் சந்திக்குமாறு சொல்லிவிட்டு நாங்கள் பதினெருமணிக்குச் செல்வோம், "இவ்வளவு நேரமும் என்ன செய்தாய்" என்று காத்து நிற்பவர் கேட்டால், "வங்கியிற் கால் கடுக்க நிற்க வேண்டியிருந்தது" என்று கூறிப் பழியை வங்கியிற் போட்டுவிடுவோம்.

### நிதியும் நீதியும்

நாட்டு நிர்வாகத்திலும் இதே மாதிரித்தான். சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்தி பெறுபவர்கள்காலக்கிரமத்திற் பெரியகோட்டு நீதிபதிகளாகி விடுகின்றனர். வருமானம் அறவிடும் வேலைகளுக்குப் பொறுப்பாக இவர்களை விடுவதில்லை. ஏனெனில் இது காசுடன் ஊடாடும் விஷயமாகும். நீதியும் பணமும் வெவ்வேறு துறைகளாகும். இலங்கையர் நீதி செலுத்துவார்கள். ஆனுல் நிர்வாகப் பொறுப்புகளுக்கு இவர்கள் தகுதியற்றவர்கள். ஆகவே வருமானப்பகுதிகளில் இவர்களை அதிகாரிகளாக நியமிப்பது இயலாதாகி விடுகின்றது.

இன்று யாவும் ஒரே மாற்றமடைந்து விட்டன. அரசாங்கத்திலும், வியாபார ஸ்தாபனங்களிலும், வங்கிகளிலும் இம்மாற்றங்களைக் காண்கின்றோம். கலப்பை பிடித்தவர்கள் உடம்பில் உள்ள மண்ணைத் தட்டிக் கழுவிவிட்டுத் துலங்குகின்றனர். மன்னுதி மன்னர்கள், தங்கள் கிராமத்திலுள்ள வீடுகளிலே தங்கிக் காலங் கழித்து வருகின்றனர்.

### பதில்

✻

1. 25.
2. அரசகேசரி
3. ஆபிரகாம் லிங்சன்
4. வட இந்தியாவில்
5. மகாசேனன்.

# யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
## 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

[3514]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1948-ம் ஆ. ஒக்டோபர் மீ 31உ ஞாயிறுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org